கடவுள் துணை.

ஜாதக ராஜ "பாவ இருவாக்ஷி"

என்னும்

ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள்.

மலர் 1.

பாகம். நெ. 3. ஜீவன பாவம்.

ஜீவன பாவம் என்ற பத்தாம் பாவ பலன்.

(இந்து ஜோதிட நிரயன ரீதியாய்ப் பார்க்க வேண்டியது.)

(Astrological Dogmas employed mostly in Nadi Granthas.)

இது நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட விதிகளின் திரட்டு முதலியன ஆகும்.

இது சென்னை முத்தியாலுப்பேட்டை ஐ ஸ்கூலில் சைன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும், கணித சாஸ்திரத்தில் பி. ஏ. பட்டம் வகித்தவரும், சுத்த திருக்கணித, வாக்கிய பஞ்சாங்க கணிதரும், இராஜ ஜோதிட கணிதம், ஜாதக கணிதம் ஒராம் பாகம் என்ற ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம், பல பாகக் கிரந்தங்களாகிய ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் ஒன்று, இரண்டு, ஜாதக லக்கின ஸ்புட பாவ ஸ்புட கணனம் இவைகளின் ஆசிரியரும், பிருஹத் ஜாதகத்தின் மொழி பொழிப்புரை ஆசிரியருமாகிய,

C. G. ராஜன், B. A. *(Mathematics)*

அவர்களால் ஆக்கப்பட்டது.

கிடைக்கும் இடம் :—சி. சுப்பிரமணியம் அண்டு பிரதர்ஸ்,
பப்ளிஷர், நெ. 36, ஆயலூர் முத்தையா முதலி தெரு,
சௌகார்ப்பேட்டை போஸ்டு, சென்னை.

All Rights Reserved] *1943* *[First Edition.*

இவர்

C. G. ராஜன் B. A. (Mathematics)

என்னும்

C. கோவிந்த ராஜன் B. A. (Mathematics)

C. GOVINDA RAJAN, B. A. (Mathematics)

இவர் ஜாதக கணிதம், பிருஹத் ஜாதகம், நவக்கிரக ஸ்புட கணனம், என்னும் சித்தாந்த சிரோன்மணி, லக்கின ஸ்புட பாவ ஸ்புட கணனம், சர்வார்த்த சிந்தாந்தமணி, ஜாதக ராஜ மனோரஞ்சிதம், ராஜ பாவ இருவாக்ஷ முதலிய ஜோதிட புஸ்தகங்களின் ஆசிரியர்.

மேலும் ஷை **C. கோவிந்த ராஜன்** என்பவரால் செய்யப்பட்ட

சிரோன்மணி திருக்கணித, வாக்கிய பஞ்சாங்கங்கள்

இவருடைய முழுப் பெயராகிய

C. கோவிந்த ராஜன், B. A. (Mathematics)

என்ற பெயருடன் இனி வெளிவரும்.

மேலும் இவருக்கும் ஆனந்தபோதினி கம்பெனிக்கும் 1941-ம்ஸு முதல் வியாஜ்யங்கள் ஏற்பட்டு விரோதமாகையால் இவருடைய புஸ்தகங்களும் பஞ்சாங்கங்களும் ஆனந்தபோதினி கம்பெனிக்குச் சப்ளை செய்வது நிறுத்தப்பட்டது.

இவரும், இவர் குமாரர் C. சுப்பிரமணியம் என்னும் C. S. மணியம் ஆகிய இவர்களால் எழுதப்பட்டதும், பார்வையிடப்பட்டதுமான புஸ்தகங்கள் முதலியன விபரம்.

		விலை ரூ.	அ.	பை
1	ஜாதக கணிதம் முதல் பாகம் என்னும் ஜோதிட கிரக சட் பலம் ஆயுள் கணிதம் மூன்றாம் பதிப்பு ...	2	8	0
2	ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்னும் ஜாதகப் பலா பலன்கள் நிர்ணயம்	2	12	0
3	ஜாதக கணிதம் மூன்றாம் பாகம் என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம்—மலர் 1.	3	4	0
4	ஜாதக கணிதம் நான்காம் பாகம் என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம்—மலர் 2.	2	4	0
5	ஜாதக சிரோன்மணி என்னும் வராஹ மிஹிருடைய பிருஹத் ஜாதகம்	2	0	0
6	தெசா புத்தி சிந்தாமணி	1	8	0
7	நவக்கிரக ஸ்புடகணனம்—6300ஸு த்திற்கு—தமிழ் ...	5	0	0
	,, ,, இங்கிலீஷ் ...	5	0	0
8	ஜாதக தெசாரிஷ்ட நிவாரணி	0	6	0
9	லக்கின ஸ்புட பாவ ஸ்புட கணிதம்-தமிழ்	1	8	0
10	,, ,, இங்கிலீஷ்	1	4	0
11	ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி களத்திர பாவம்—மலர் 1 ...	0	10	0
	,, ,, ஆயுள் பாவம்—மலர் 1 ...	0	10	0
12	ஜாதக ஜம்பு நாதீயம்	0	12	0
13	ஜாதக சர்வார்த்த சிந்தாமணி	2	4	0
14	ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி-ஜீவன பாவம்			

15-சென்ற 60 வருஷத்திய கிரகங்களின் கிராந்தி. 16-ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 3. 17-ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 4. 18-ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 5. 19-சுகப் பிரம்மரிஷிவாக்கியம் என்னும் சுகர் வாக்கியம்-துவாதசபாவங்கள், சுகர்நாடி உதாரண ஜாதகங்களுடன் செய்யுள். 20-சத்தியாச்சாரியாருடைய "ஜாதகசத்தியாச்சாரியம்" 21-சத்தியாச்சாரியாருடைய துருவ நாடியில் சொல்லிய முந்நூறு நாடி அம்சங்களின் பலாபலன்களும் உதாரண துருவநாடி ஜாதகங்களும். 22-பிருஹத் பராசர ஹோரா சாஸ்திரம். 23-பலபத்திருடைய ஹோரா ரத்தினம். (இவைகள் எல்லாம் தமிழ் புத்தகங்கள் அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளிவரும்.

இதர எல்லா கம்பெனியிலுள்ள ஜோதிடம், வைதியம் மற்ற புஸ்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்தால் வாங்கி அனுப்பப்படும்.

ஷை புத்தகங்கள் வேண்டுவோர் முன்னதாக தபால் செலவுக்காக முன் பணம் கொஞ்சம் அனுப்பவேண்டியது.

Printed at "VINODAN" PRESS, 33, Jones Street, G. T. Madras.

முன்னுரை.

இப்புத்தகம் என்னுடைய “ஜாதக கணிதம் மூன்றாம் பாகம் நான்காம் பாகம் என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 1, மலர் 2,” ஜாதகராஜ பாவ இருவாக்ஷி என்னும் ஆயுள் ஜீவன, களத்திர பாவங்கள் பாகம் நெ. 1, என்ற ஆயுள் பாவம், நெ. 2 என்ற களத்திர பாவம் என்ற நான்கு புத்தகங்களின் தூடர்ச்சி யாகும். இப்புத்தகங்களில் கொடுத்துள்ள முன்னுரைகளையும் இங்கு வாசிக்கவும். இப்போது ஜோதிட கிரந்தங்கள் அநேக கிரந்தங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் கிரகங்களின் நிலையை மேஷ லக்கினம், ரிஷப லக்கினம் முதலிய துவாதச லக்கினங்கள் ரீதியாய் அனுசரித்துச் சொல்லாமல் அதாவது லக்கினம் இன்ன ராசியிலிருக்கின்றதென்று குறிக்காமல் பொதுவாய் லக்கினத்திற்கு இத்தனையாவது வீட்டில் அல்லது பாவத்தில் அல்லது ராசியில் கிரகம் இருந்தால் இந்த இந்த பலன்கள் நேரிடும் என்று சொல்லி இருக்கின்றது. லக்கினத்தை இன்ன லக்கினம் என்று நிர்ணயித்துவிட்டால் கிரகங்களின் ஆதிபத்தியமும் சுபா அசுப குணங்களும் தானாகவே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன; அப்போது கிரகங்கள் தங்கள் தங்களுடைய நிலையையும் பார்வையையும் சம்பந்தத்தையும் அனுசரித்துக்கொடுக்கும் பலன்கள் அந்தக் குறித்த லக்கினம் வரையிலும் ஸ்திரமாகவும் துல்லிபமாகவும் அமையப்படுகின்றன. இவ்விதமாக லக்கினம் இன்ன ராசியிலிருக்கின்றது என்பதைக் குறிக்காமல் பொதுவாய்ப் பலன் சொல்லத் துணிவோமானால் கிரகங்களின் ஆதிபத்தியமும் சுபா அசுப குணங்களும் தானாகவே நிர்ணயிக்கப்படாமல் போய்விடுவதால் ஜோதிடர்கள் அந்தந்தக் கிரகத்தின் ஆதிபத்தியத்தையும் சுபா அசுப குணங்களையும் தாங்களே நிர்ணயஞ் செய்து அதனால் பலபலன்களில் ஏற்படும் பேதாபேதங்களைச் சிரமப்பட்டுத் தாங்களே நிர்ணயஞ் செய்யவேண்டியதாயிருக்கும். இத்தகைய சிரமத்தை நீக்கும்பொருட்டும், ஜோதிடர்கள் தாங்களே நிர்ணயஞ் செய்வதில் தவறுகள் ஏற்படக்கூடுமாகையால் அத்தவறுகள் கூடியமட்டும் நேரிடாமலிருக்கும்பொருட்டும் நமது மகரிஷிகள் தங்களுடைய கிரந்தங்களில் லக்கினத்தை நிர்ணயஞ் செய்தும், அப்படி நிர்ணயஞ் செய்வதாலுண்டாகும் கிரகங்களின் ஆதிபத்தியத்தையும் சுபா அசுப குணங்களையும் அனுசரித்தும் பலாபலன்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்திலுள்ள கிரக அமைப்புகள் பல விதிகளில் பொருந்தி சரிபட்டு வருமாகில் அதாவது சில கிரக அமைப்பு ஒரு விதியிலும், இன்னஞ் சில கிரக அமைப்பு இன்னொரு விதியிலும், இன்னஞ் சில கிரக அமைப்பு இன்னொரு விதியிலும் பொருந்திச் சரிப்பட்டு வருமாகில் இந்த மூன்றுவித விதிகளில் சொல்லியுள்ள பலாபலன்களை ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டு இப்பலாபலன்களை ஒன்றுதட்டி ஒழுங்குபடுத்தி நிகர பலாபலன்களை யூகித்துச் சொல்லத் துணியவேண்டும். இதுதான் ஜோதிடர்களுடைய திறமையாகும்.

நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெருவு,
கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் அருகில்,
சௌகார்பேட்டை போஸ்ட், சென்னை.

C. G. ராஜன் B. A.

உ

கடவுள் துணை.

ஜாதக ராஜ "பாவ இருவாக்ஷி"

என்னும்

ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள்.

மலர் 1.

பாகம். நெ. 3. ஜீவன பாவம்.

ஜீவன பாவம் என்ற பத்தாம் பாவ பலன்.

(இந்து ஜோதிட நிரயன ரீதியாய்ப் பார்க்க வேண்டியது.)

1-வது அத்தியாயம்.

அயிட்டம் (**1**). உலகில் மனிதர்களில் ஒவ்வொருவரும் தத்தமது வாழ்நாளில் எதிர்கால வாழ்க்கையையே பிரதானமாகச் சிந்திக்கக் கூடியதாகும். இதில் ஆயுள் முதல் பிரதானமானது. அதற்குப் பிறகு ஜீவன விஷயம் அடுத்தபடியே கவனிக்கத்தக்கதாகும். ஜாதகமுள்ளவர்கள் தம் ஜாதகத்தை ஆராய்ச்சி செய்து ஜீவனஸ்தானுதிபதி, ஜீவனகாரகன் தனஸ்தானுதிபதி தனகாரகன் இவர்களின் வலிவையும் கிரகங்களின் காரகங்களையும் அறிந்துகொண்டு ஜீவனமார்க்கத்தை நிச்சயித்து அதன்படியே நடந்துகொண்டால் அதிக நன்மை உண்டாகும். இவ்வாறு அறிந்துகொள்ள முதலில் கிரகங்களும், அவைகளின் காரகங்களும் சொல்லப்படும். நம் தேசத்தில் பிரதானமாகச் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என ஒன்பது கிரகங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு அவற்றிற்குரிய பலன்களை மகரிஷிகள் உபதேசித்திருக்கிருர்கள்.

நவக்கிரக காரகங்கள்.

அயிட்டம் **(2)** சூரியனுக்குரிய காரகங்கள் :—

நெல், தந்தம், புலிநகம், விறகு, தரகு, மருந்து, தாம்ரம், தகப்பன், ராஜசேவை, தேவஸ்தானம், ஹோமகாரியம், இராசாங்கம், பிதுருவர்க்கம், வைத்தியம், பூஜை செய்தல், ரத்னம், கரி, கோதுமை, உலர்ந்த புல், வைக்கோல், வஞ்சித்தல், அதிசாரம், சாமரம், கொம்பு, விதைகள், தலைநோய், ரகசிய மறிதல், கல் உடைத்தல், மாணிக்கம், க்ஷத்திரியன் ஆகிய இவைகளுக்குச் சூரியன் காரகராவர்.

(3) சந்திரனுக்குரிய காரகங்கள் :—

மந்திராலோசனை, தயிர், நெய், வெல்லம், துணி, புஷ்பம், எள்ளு, சரீரப்பயிற்சி, வெள்ளி ரூபாய், சங்கு, முத்து, வெங்கலம், தேன், பால், சுகபோஜனம், ரூபம், தாய், தாய்வர்க்கம், அம்பிகை உபாசனை, ரசவஸ்து, சாப்பாட்டுக்கடை, நூல் வியாபாரம், சில்லரைக்கடை, குதிரை, முயல், மான், பாரிசவாய்வு, க்ஷயம், பனி, பச்சைப்பயறு, குளிர்ச்சி, வட்டிக்கடை, வெண்பட்டு, அரிசி, பழம், வெண்ணெய் பாலாடை, மகோதரம், ராஜசினேகம், பயிர் செய்தல், கரும்பு, ஜலம், தாமரை, ஹாஸியம், ஜலவஸ்து, ஈயம், அரிசி, வைசியர், ஆகிய இவைகளுக்குச் சந்திரன் காரகராவர்.

(4) செவ்வாய்க்குரிய காரகங்கள் :—

பூமி, ரிணரோகம், ரிணம், கட்டி, சொரிசிறங்கு, க்ஷத்திரியன், குரூரச்செய்கை, துவேஷகுணம், நெருப்பு, கடன், மாற்ருந்தாய், யந்திரம் ஓட்டுதல் அல்லது செய்தல், சமையல் செய்தல், சுண்ணும்பு, ஓடு செங்கல் இவை சுடுதல், மண்ணெண்ணை ரசவாதம், தாதுர்வாதம், கூட்டிக்கொடுத்தல், பரகாமினீ, பராக்கிரமம், மனச்சந்துஷ்டி, துணிகரம், சடுதியில் மரணம், தீப்பெட்டி துர்க்கா தேவிஜபம், சகோதரன், ஷ வர்க்கம், சுப்பிரமணியம், ஆட்டாலுற்பத்தியாகும் வஸ்து, கம்பளி, சன்னியாசம், ஏமாற்றல், கில்ட்டு முதலியவைகள், முலாம்பூசல், ஈயம்பூசல், ஹிம்சித்தல், கற்பூரம், ராணுவம், கபடம், தட்டாரவேலை ஸ்திரீ சஞ்சலம், பவழம், துவரை, போலீஸ், கட்டிடவேலை, கண்டிராக்ட்டு, வழக்கு ஜெயித்தல், தாயாதிகள், கிராணிரோகம், மண்பாண்டம், செய்தல், குடிவகைகள், பஸ்பங்கள், பென்ஷன் ஆகிய இவைகளுக்குச் செவ்வாய் காரகராவர்.

(5) புதனுக்குரிய காரகங்கள் :—

கலைகற்றல், கலைபோதித்தல், வாக்சாதுரியம், விவாதம், உபாசனை, யாகம் செய்தல், விவகார ஸ்தல உத்தியோகம், டைப் அடித்தல், அச்சுவேலை, சிற்பம், பந்துக்கள், மாமன், யுவராஜா, துத்திநாகம், விஷ்ணுதேவதை, குழந்தைகள், மல் யுத்தம் தேகப் பயிற்சி, சிஷ்யனுதல், எதி, பாஷண்டி, கணக்கெழுதுதல், நாட்டியம், வேசி, பத்திரிகை சம்பந்தம், வியாபாரம், வேர்கள், இலை, கரிகாய், ஜோதிடம், புரோகிதம், சித்திரமெழுதல், மத சம்பந்தம், இன்ஜினீயர், நூது செல்லல், பஞ்சாயத்துப்பேசல், பெண் அலி, நாடகம், பக்ஷி பிடித்தல், குன்மரோகம், விரைவாதம், சேங்கன்று, வெந்தயம், இளமை, தாதன், வாகனம் நடத்துதல், தேர் நடத்தல், லாட்டரி, சூதாடல், வைகாநஸம், யாகதீக்ஷை, பச்சைப்பயிறு பச்சை ரத்தினம், சாணுன், பச்சிலைகள் ஆகிய இவைகளுக்குப் புதன் காரகராவர்,

(6) குருவுக்குரிய காரகங்கள் :—

குருத்துவம், புத்திரன், புத்தி, ஞானம், மந்திரித்துவம், சுத்தி, புராண இதிஹாஸாதிகள், கஜானு அல்லது பாங்கு, இந்திரிய நிக்கிரகம், சன்மானம், தயை, நியாயவாதம், சரீரபுஷ்டி, ஸ்தூலம், ரக்ஷித்தல், சாஸ்திரகர்த்தா அல்லது விதிப்பவன், உபாத்தியாயம், ராஜாங்கத்தொழில், கல்வி இலாகா, பாதிரி, ஆண்டிபரதேசி, பிரசங்கி, அஷ்டமஹாசித்துகள், தேன், கடலை, சிரகம், யாசகம், உபதேசம், சிஷ்யக் கூட்டத்தார் மூலம் ஜீவனம், புஷ்பராகம், தவமியற்றல், வேதமோதல், தீக்ஷை, பொன், பிராம்மணர், கனக தண்டிகை, கர்மாதிகாரம் ஆகிய இவைகளுக்குக் குரு காரகராவர்.

(7) சுக்கிரனுக்குரிய காரகங்கள் :—

ரூப ஸ்திரீபோகம், மந்திரியாதல், ரூபம், வாசனை, சம்பத்து, வஸ்திரம், வாகனம், வயிரம், புதையல், சுகந்த புஷ்பாதிகள், கட்டில் சாமான் வகையரா, பூஷணம், வியாபாரம், யானை வியாபாரம் குதிரை வியாபாரம், கப்பல் வியாபாரம், ஆசை, புளி, ஈயம், மொச்சை, மெத்தை வீடு, அரண்மனை, ஜலப் பிரயாணம், வயிரம், வெள்ளி, பிராமணர், ஸ்திரீ, தாரம், தாரவர்க்கம் லக்ஷ்மீ கடாக்ஷம், பல்லக்கு, லக்ஷ்மீ உபாசனை ஆகிய இவைகளுக்குச் சுக்கிரன் காரகராவர்.

(8) சனிக்குரிய காரகங்கள் :—

தண்டித்தல், இரும்பு, கல்லெடுத்தல், பழையது புதுப்பித்தல் வியாபாரம், கழுதை, ஒட்டகை, எள்ளு, கொழுப்பு, விளக்கெண்ணெ, தோல், மந்தவஸ்துக்கள், சேவகர், வாயு, கஷ்டப்படல், மூட்டை சுமத்தல், தாஸன், திருடுதல், எருமை மூலம் ஜீவனம், உமி, மயிர், தவிடு, பொட்டு, வதைசெய்தல், நீலம், பஞ்சு, சன்னியாசம், கம்பளி, பன்றி, மதுமாமிசாதிகள், பயிர்செய்தல், சாத்தான், ஐயனர், டம்பம், வாயடித்தல், அங்கஹீனம், கட்டை உடைத்தல், மித்திரபேதம், அடுத்தோரைக் கெடுத்தல், கலஹம், கோள் சொல்லல், எருவிற்றல், குப்பை வியாபாரம், கந்தைத் துணி, நயவஞ்சகம், கிராம, பட்டிண அதிகாரம், பிக்ஷை, பிச்சையெடுத்தல், செக்காடுதல், புண்ணக்கு விற்றல், வக்கீல் தொழில், அஞ்சனம், பாஞ்சராத்திரம், காவல் செய்தல், சூத்திரர், தாமசம், அடிமையாதல், நிமந்தரணம், புகைவண்டி, தார் ஆகிய இவைகளுக்குச் சனி காரகராவர்.

(9) ராகுவுக்குரிய காரகங்கள் :—

பஞ்சு, கங்காஸ்நாநம், காடுமலைசுற்றல், கண்ணுடி, மந்திரம் ஜபித்தல், விஷ வைத்தியம், ரகசியமுடைமை, பரதேசவாசம், குலத்தைக் கெடுத்தல் மிலேச்சத்தன்மை, பித்தகுன்மம், பிளவை, துஷ்டஜந்து பயம், சிறை, பின்னல் வேலை, வைசூரி, விதவை சேர்க்கை, க்ஷயம், விலங்கிடுமிடம், ரேடியோ, கெடியாரம், ஈனத்தொழில், பிதாமகன், கருங்கல், கோமேதகம், சந்தனம், உளுந்து, மறைந்த வாசம், சண்டாளர், துருஷ்கர், பகல்சம்போகம், டாக்டர் தொழில், அன்னிய கர்மம், தந்தி, டெலிபோன், மூங்கில் ஆகிய இவைகளுக்கு ராகு காரகராவர்.

(10) கேதுவிற்குரிய காரகங்கள் :—

விரக்தி, வைராக்கியம், ஞானம், மோக்ஷம் பிராம்மணர், கபடம், மயக்கம்தரும் வஸ்து, பரதேசஜீவனம், சித்தப் பிரமை, விஷப்பாண்டு, அகங்காரம், கொலை செய்தல், தீபாந்தரம், மந்திரம், கணபதி உபாசனை, விபசாரம், தாய் வழிப்பாட்டன், மாதாமகிவர்க்கம், கொள்ளு, வைடூரியம், துருக்கல், கத்தி ஆகிய இவைகளுக்குக் கேது காரகராவர்.

(11) கிரகங்களின் வலிவை அநுசரித்துக் கிரகங்களுக்குச் சொல்லியுள்ள தொழிலை ஜாதகருக்குச் சொல்ல வேண்டும். ஒரே கிரகம் வலுத்திருந்தால் ஒரே தொழிலும், இரண்டு கிரகங்கள்

வலுத்திருந்தால் இருவித தொழிலும் பல கிரகங்கள் வலுத்திருந் தால் பலவிதத் தொழிலும் கிரகங்களின் வலிவைப்போலும் அவர் களின்கால அளவைப்போலும் நேரிடும். தொழில்களைக் கிரகங்கள் அவரவர்களுக்குரிய தேசத்தில் அவரவர்களுக்குரிய ஜாதியார்கள் மூலமாகக் கொடுத்து வருகிறார்கள். அதை அவசியம் கவனித்துத் தெரிந்துகொண்டால் அதன்படி நடத்தல் சாத்தியமாகும். கிரகங் களுக்குரிய திக்குகளும் தேசங்களும் கீழ் கண்டபடி ஆகும். சூரியனுக்கும் சந்திரனுக்கும் உலகெல்லாம் சொந்தம், சனிக்கும் ராகுவுக்கும் இமையமலை முதல் கேகயநாடுவரையிலும், புதனுக்கு கேகயநாடு முதல் விந்தியமலை வரையிலும், குருவுக்கு விந்தியமலை முதல் கௌதமநதி வரையிலும் சுக்கிரனுக்குக் கௌதமநதி முதல் கிருஷ்ணாநதி வரையிலும், செவ்வாய்க்குக் கிருஷ்ணாநதி முதல் இலங்கை வரையிலும் ஆகும். திசைகளில் சூரியனுக்கு நடு மத்தியும், சுக்கிரனுக்குக் கிழக்கும், சந்திரனுக்குத் தென்கிழக்கும், செவ்வாய்க்குத் தெற்கும், ராகுவுக்குத் தென்மேற்கும், சனிக்கு மேற்கும், கேதுவுக்கு வடமேற்கும் குருவுக்கு வடக்கும், புதனுக்கு ஈசானியமும் திக்குகளாகும்.

(12) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் கிரக மில்லாதிருந்தாலும் அல்லது கிரக பார்வை ஷ்டி பத்தாமிடத்திற் கில்லாதிருந்தாலும் ஜாதகர் தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டு பூமியில் அலைந்து திரிபவராவார். இத்துடன் கர்மாதிபதி கெட்டு ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடங்களிலிருந்து பாபருடைய திருஷ்டியை யடைந்து சுபர்களின் சேர்கை, பார்வை இவைகளை யடையாதிருந்தால் இப்பலன் நிச்சயமாக நடக்கும். கர்மாதிபதி நீச்சமூட, அஸ்தமனாதிகளையுமடைந்திருந்தால் அதிகமாகக் கஷ்ட முண்டாகும். ஜென்மலக்கினம், சந்திர லக்கினம் இவற்றிற்குப் பத்தாமிடத்தில் உள்ள, (இந்தப் பாவாதிபதிகள் தவிர மற்ற) பலமுள்ள பாபர்கள் மூலம் எல்லாக் காரியங்களிலும் தடை யுண்டாகும், அல்லது எக்காரியமும் நிறைவேறாமல் அரைகுறை யாய் நின்றுவிடும், அல்லது ஒவ்வொரு காரியத்திலும் பிரவேசித் துப் பலனின்றி நஷ்டமே யுண்டாகி அபகீர்த்தி யுண்டாகும்; வெளிதேச சஞ்சாரமே நேரிடும், ஓரிடமும் நிலையாகாது, சுகம் குறையும், பத்தினி புத்திர சுகம் குறையும், ஆச்சாரம் குறையும், சமர்த்தமும் பலிதமாகாது, சஞ்சலம் நேரிடும், சன்னியாசிக்குச் சமவாழ்வாகும், நீச்சத்தொழில் நேரிடும், அல்லது கோரஜீவனம் நேரிடும், தேசாதேசங்கள் செல்லுதலும் நேரிடும். குரூரக் கிருத்தி யங்களும் எடுத்த காரிய விக்கினமும் நேரிடும். மேற்படி பத்தா

மிடங்களே பாபக்கிரக ராசியுமாயின் விசேஷ அனிஷ்ட பலனைத் தரும் என்றேற்படுகிறது. மேலும் பிரபுத் துவேஷமும், பிதுரார்ஜித நாசமும் உண்டாகும்.

(13) ஜென்ம லக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் பத்தாம் பாவத்தில் சுபரிருந்தால் சுபபலனும், யாகாதி காரியங்களும், சற்கீர்த்தியும், வியாபார விருத்தியும், உத்தியோக லாபமும், அன்னதானுதி கர்மங்களும், புத்திர பௌத்திர சம்பத்தும், தார சுகமும், உபய வம்ச விருத்தியும், கௌரவ வாழ்க்கையும், யஜமான விசுவாசமும், ராஜப் பிரீதியும், இஷ்ட சித்தியும், ஆடையாபரணுதி லாபங்களும், கிருக வாகனுதி சகல பாக்கியமும், நிக்ஷேப லாபங்களும், பூமி விருத்தியும், மேன்மேலும் விருத்தியுமேற்படும்.

(14) ஜென்ம லக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் பத்தாமிடத்தில் உள்ள சுபருக்கு அவ்விடங்கள் சுயக்ஷேத்திர, மூலத்திரிகோண உச்சாம்ச உச்சராசிகளாகின் 13-வது அயிட்டத்தில் சொல்லிய பலன்கள் நான்கு மடங்காகிப் பெருகும், அழியாப் புகழும் சம்பத்து விருத்தியும், பிதுரார்ஜித விருத்தியும், ராஜசமனுகுதலும் அல்லது ராஜனுகுதலும், ராஜ யோகமும், நகர ஆதிபத்தியமும், ராஜ சன்மானுதிகளும், குலப்பிரசித்தியும், ஜனஸமூகத்தினுல் வணக்கத்துடன் கௌரவிக்கப்பட்டிருத்தலும், பால் பசு விர்த்தியும், சுபவிர்த்தியும் ஜாதகருக்கு உண்டாகும். மேற்படி சுபர்கள் சுயக்ஷேத்திரத்திலிருந்து அசுபருடன் கூடின் அரைப்பலனே யுண்டாகும்; சமக்கிரகத்துடன் கூடின் நிதான பலனுண்டாகும், சத்துருக் கிரகத்துடன் கூடில் பலனுண்டாகி நாசமாகிவிடும். சத்துரு ராசி பத்தாமிடமாகிச் சுபர்கள் அங்கு நீச்ச அஸ்தமன மூட தோஷங்களடைந்திருந்தாலும், சத்துருக் கிரகத்துடன் கூடியிருப்பினும், மேற்படி பலன்கள் எதுவும் சித்திக்காமலேயே நின்றுவிடும். அப்படி சித்தித்தாலும் எப்போதாவது ஒரு சமயம் சித்திக்கும், அல்லது ஒரு ஒரு சமயம் அப்போதைக்கப்போது கொஞ்சம் கொஞ்சமாக தனலாப முண்டாகி அதுவும் பலவித வழிகளில் அழிவடைந்துவிடும். மேற்படி பத்தாமிடம் சுபருடனிருந்து சுபர் பார்வையையு மடைந்திருப்பின் மேற் சொல்லியபடி சுபபலன் விருத்தியுண்டாகும், அசுபரால் பார்க்கப்படின் பலன் சமமாகிவிடும்.

(15) லக்கினத்திற்குப் பத்தில் சூரியனிருந்தால் ராஜாங்க உத்தியோகம் உண்டு, பிதுரார்ஜிதம் சமமாயிருக்கும். சூரியன்

லக்கினுதிபதியாகி பத்தாமிடத்திலிருப்பின் அதிகாரிகள் சினேகமும், அன்பும், அதனுல் உத்தியோக லாபமும், பிரசித்தியான வைபோகங்களும் ஏற்படும், வெகுஜன மதிப்பு ஏற்படும், சதா போகியாவன். மேற்படி சூரியன் இரண்டாமாதிபதியாயிருந்தால் மனைவியால் தனமும், மனைவி வர்க்கம், தாய் வர்க்கம் இவற்ருல் விருத்தியும் ஏற்படும். ஷை சூரியன் மூன்ருமதிபதியாகில் புரோகிதம், உபாத்தியாயர் தொழில், விவகாரத்தில் நிபுணத்துவம், சாஸ்திர ஆராய்ச்சி, இவைகளாலும், சொர்ண வியாபாரத்தாலும் திரவிய சம்பாதனை ஏற்படும். சூரியன் நாலாமிடத்தோனுகிப் பத்தாமிடத்தில் இருந்தால் ஆமசிரார்த்தம், தரகு பேசல், வாயடித்தல், நீச்சத் தொழில், வதை செய்தல், இம்சித்தல் இவைகளால் தனவரவுண்டாகும். மேற்படி சூரியன் ஐந்தாமிடத்தோனுகில் புத்திரன் பிறந்த பின்பு அதிகாரி மூலமும் தேவாலய மூலமும் சுபங்கள் மூலமும், தர்ம காரியங்கள் மூலமும் ஜோதிடத்தாலும், வஞ்சனையாலும், பேடி மூலத்தாலும், மந்திர தந்திராதிகளாலும் தனவரவுண்டாகும். ஆருமிடத்தானுகிச் சூரியன் பத்தாமிடத்திலிருப்பின் சத்துருக்களை அழித்தும், பிதுரு தனத்தாலும், ஆசாரியனுலும், அம்மானுலும், கடன் மூலமும், தடங்கல் செய்வதாலும், தாயாதிகளாலும், திருடர்கள், வேடர்களிவர்களாலும், ஜாதகர் தனமடைவர். ஷை சூரியன் ஏழுக்குடையவனுகி பத்தாமிடத்தில்ருப்பின் இரண்டாந்தாரத்தினுலும், சகோதரன், வஸ்திரம், இவற்றின் சம்பந்தத்தினுலும், எண்ணை தினுசுகளாலும், யாத்திரைகளாலும், மித்திரர்களாலும், விஷ ஜந்துக்களின் பேரால் ஏமாற்றலும் செய்து ஜீவிப்பான். எட்டாமிடத்ததிபதியாகிச் சூரியன் பத்தாமிடத்திலிருந்தால் மருந்து, ஸ்திரீ, ரத்னம் இவற்ருலும், வஸ்திர வியாபாரத்தினுலும், நெல், கோதுமை இவற்ருலும், சொர்ணம், வெள்ளி இவற்ருலும், தனமுண்டாகும். ஒன்பதாமிடத்தோனுகிப் பத்தாமிடத்தில் சூரியனிருப்பின் ஜல வஸ்துக்கள், மூத்தவர்கள், மாதுரு வம்ச ஸ்திரீ, ஸ்திரீயினிடம் அண்டியிருத்தல், பழம் முதலியவைகளாலும், பயிர் செய்தலாலும் கப்பல் வியாபாரத்தாலும், தூது செல்லல், மல்யுத்தமிவற்ருலும், ஜாதகர் தனமடைவார். பத்தாமிடத்தானுகிச் சூரியன் பத்தில் இருந்தால் பிரபல ராஜதந்திரியாவன். பதினேராமிடத்தோனுகிப் பத்தில் சூரியன் இருந்தால் பயிர் மூலம் ஜீவனமுண்டு. பன்னிரண்டாமிடத்தானுகிப் பத்தில் சூரியனிருந்தால், கணிதம், மாதாமகன் சொத்து, தகப்பனுடைய சகோதரியின் சொத்து, இவற்ருலும் ஜாதகர் தனமடைவர்.

(16) லக்கினத்திற்குப் பத்திலுள்ளச் சூரியனைச் சந்திரன் பார்த்தால் பழம், புஷ்பம் இவற்ருலும், அன்னம், ஹோட்டல் போன்றவையாலும், செவ்வாய் பார்த்தால் ஏமாற்றல், கில்ட்டு வஸ்து, புரோகிதம், கம்பளம் இவற்ருலும், புதன் கூடின் கணிதம், சிற்பம், கைத்தொழில், பஞ்சாயத்து, அச்சுக் கோர்த்தல் டைப் அடித்தல், தூது செல்லல் இவற்ருலும், ராஜாங்க சம்பந்த ஸ்டாம்பு விற்றலாலும், முத்திரைக் கடுதாசியாலும், குரு பார்த்தால் பல வழிகளாலும், சுக்கிரன் கூடின், ரூப ஸ்திரீ, ராஜ மந்திரித்துவம், கவித்துவம், சங்கீதம், இவற்ருலும் வாகனம் விற்றல், வஸ்திரம், வயிரம் இவை வாங்கி விற்றல் இவைகளாலும் சயன சம்பந்த கட்டில் மெத்தை, வாசனை திரவியம் இவை களாலும், வெள்ளி, காவிய நாடகங்களாலும், ஜீவன முண்டு. சனி பார்த்தால் வஞ்சனை, ஆமசிரார்த்தம், அடிக்கடி தொழில் ஏற்பட்டு துண்டித்துவிடுவதும், ஜீவனத்துக்கே கஷ்டமும், வேலை கிடைத்தும் ஊதியம் கிடைக்காமலும், அல்லது வெகு கஷ்டப் பட்டும் வேலையே கிடைக்காமலும் சோம்பலும், அலைச்சலும் பிச்சை யெடுத்தலும், தேசந்திரிதலும் ஏற்படும். ஷை சூரியனை ராகு பார்த்தால் தேகத்தில் அடிக்கடி தினவு சொரி சிரங்குக ளேற்பட்டு தேகம் துர்ப்பலமாகி, வேலை யின்றியும் புரோகிதம் முதலிய தொழிலும், நீச்சத் தொழிலும் செய்து ஜீவனமும் செய் வார். கேது பார்த்தால் ஈவு இரக்கமின்றி யிருத்தலும், நம்பிக்கை மோசமும், பிராமணார்த்த அன்னமுண்ணலும், பலவித கஷ்டங் களும், அப்போதைக்கப்போது அடிக்கடி ஓரோர்சமயம் சொற்ப சொற்ப திரவியம் கிடைத்து ஜீவனமும் ஏற்படும்.

(17) லக்கினத்திற்குப் பத்திலுள்ளச் சூரியனை அஷ்ட மாதிபதி பார்த்தாலும் அல்லது கூடியிருந்தாலும் அஷ்டமாதிபதி யின் காரகர்களாலும், அஷ்டமாதிபதியின் தேசங்களிலும், அஷ்ட மாதிபதியின் ஜாதி யாராலும், அஷ்டமாதிபதியின் திசை காலங் களில் அவ்வஷ்டமாதிபதி கெடுதல்களைச் செய்வார். கிரகங்கள் அஷ்டமாதிபதியாகிச் சூரியனுடன் கூடி யல்லது சூரியனைப் பார்த்தால் தங்களுக்குரிய தொழிலையும் எந்தத் தொழிலையும் கெடுத்து விடுவார்கள். கிரகங்கள் 3, 6, 11, 12-ம் ஆதிபத்தியங் களையுடையவர்களாகிச் சூரியனுடன் கூடி யல்லது சூரியனைப் பார்த்தால் பலன் குறையும். 1, 4, 5, 9, 10-ம் ஆதிபத்தியங்களை அடைந்து சூரியனைக் கூடி யல்லது பார்த்தால் சுபபலனுண்டாகும். கிரகங்கள் 2-ம் ஆதிபத்தியத்தை அடைந்து சூரியனைப் பார்த்தா லும் சூரியனுடன் கூடினுலும் பலன் கொஞ்சம் அதிகப்படும்,

(18) லக்கினத்திற்கும் பத்தாமிடத்தில் சூரியன் இருந்து, பத்தாமிடம் குருவின் வீடாகின் சாஸ்திர ஆராய்ச்சியும், தீக்ஷை உள்ள தன்மையும், குருத்துவமும், யாத்திரை சித்தியும் உண்டாகும்.

(19) லக்கினத்திற்குப் பத்தாமிடத்திலுள்ளச் சூரியனைக் குரு அஷ்டமாதிபதியாகிப் பார்த்தால் அரசாங்கத்தில் கஜானு அல்லது போஸ்டாபீஸ் முதலிய இடங்களில் உத்தியோகமேற்பட்டு அது பங்கமாகிவிடும். மேற்படி குருவே ஐந்து, ஒன்பதாமாதிபத்தியமடைந்தவராகிப் பார்த்தால் சுபபலன் உண்டாகும், படிப்படியாய் உத்தியோக மேன்மையுண்டாகும், புத்திரலாபமுண்டாகும். புத்திரன் பிறந்த பின்பு வெகு மேன்மையுண்டு. ஜாதகர் ஈசுவர சன்னிதியில் பூஜை செய்வார் அல்லது தர்மகர்த்தாவாவார். மேற்படி பத்தாமிடத்திலுள்ளச் சூரியனைக் குரு நான்கு, ஏழுக்குடையவராகிப் பார்த்தால் ஜாதகர் வீடு, வாகனம், யானை முதலியவற்றால் தனமடைவார். கல்வி விசேஷமாயடைவார். கல்வியைப் போதிப்பதால் தனலாபமடைவார், குரு ஆறு, ஒன்பதாமாதிபத்தியமடைந்து பத்திலுள்ளச் சூரியனைப் பார்த்தாரானால் அம்மானாலும் பிதாவாலும் இரண்டாந்தாரத்தினாலும் சகோதரனாலும் சத்துருக்களாலும் தாயாதிகளாலும், சில காரியங்களைத் தடை செய்வதன் மூலமும், ஜாதகர் திரவியம் அடைவார். ஷை சூரியனைக் குரு ஒன்று, நான்காமாதிபதியாய்ப் பார்த்தால் கீர்த்தி, ஸ்திரீ, வித்தை இவைகளை அடைவார். பிரபல அதிகாரியால் தனவாகன உத்தியோகாதிகளடைவர். குரு 3, 11, 2 இந்த ஆதிபத்தியங்களடைந்து பத்திலுள்ளச் சூரியனைப் பார்த்தால் ராஜ்ஜியாதிகாரமும் அநேக வேலையாள் முதலியன அடைந்தும் அதிகார சம்பத்தும் உடையவராகி வாழ்வார்.

(20) லக்கினத்திற்குப் பத்தில் சூரியனிருந்து அந்தப் பத்தாம் வீடு செவ்வாயின் வீடாகில் பிதாவின் சகாயத்தாலும் பயிர்த் தொழிலாலும் பிரபல உத்தியோகத்தாலும் மித்திரராலும் தனமுண்டாகும். சுக்கிரன் வீடாகில் ஸ்திரீ தனம்வரும். அடிக்கடி வேலையில் சங்கடமுண்டு. சில்லரை உத்தியோகங்களும் அதிலும் பங்கமும் உண்டு, நீச்சரிடம் சேவையுண்டு. சொற்ப வியாபாரமுண்டு. வெள்ளி வியாபாரம் வஸ்திர வியாபார மிவைகளால் தனம்வரும். புரோகிதம் மூலமும் தனம்வரும். ஷை வீடு புதன் வீடாகில் கணிதம், சிற்பசாஸ்திரம், விவகாரம், மல்யுத்தம் சில்லரை விவகாரம் தீர்த்தல் ஜோதிடம் முதலியவற்றாலும்

பிதுரார்ஜிதத்தாலும் ஜீவனம் உண்டு. டைப் அடித்தல் முதலியனவும் கூட உண்டாகும், எழுத்து வேலை கணக்கர் தொழில் கல்விச் சாலை, சித்திரம், கைரேகை எடுத்தல் படம் எழுதுதல், இவைகளாலும் புதனுக்குரிய காரக மார்க்கங்களாலும் தனமுண்டாகும், சந்திரன் வீடாகில் பயிர் செய்தல், ஜல வஸ்துக்கள், தர்ய்வழி, அரிசி, வஸ்திரம், இவற்றாலும் தயிர் நெய் முதலியவற்றாலும் சந்திரனுக்குரிய முன் சொல்லப்பட்ட காரகங்களினாலும் தனமுண்டாகும். மேற்படி சூரியன் தன் வீட்டில் இருப்பின் ராஜ யோகமும், சனியின் வீட்டிலிருப்பின் தண்டித்தல் உத்தியோகமும், ஸி. ஐ. டி. மூலம், உத்தியோகமுமுண்டாகும், இது சிலருடைய மதப்படி சனியின்வீட்டில் பலன் குறைத்துக் கூறப்பட்டிருக்கிறது.

(21) சூரியன் லக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டால் தாழ்மையான இடத்திலும் தாழ்ந்தவரிடமும் வேலை செய்தலால் தனமுண்டாகும். அடிமைத்தொழில், பிச்சை யெடுத்தல், சன்யாசியாதல், சேவகத்தொழில், பிணந் தூக்கல், பிரேத காரியங்களைச் செய்தல், சிரார்த்த அன்னமுண்ணல், இவற்றால் தனமுண்டு. பாழடைந்த, பழமையான, இடிந்த வீடு முதலிய ஸ்தானவாசம் பாரமூட்டை சுமத்தல், ரயிலில் வேலை செய்தல், எரு, குப்பை விற்றல், நார் உரித்தல், குப்பை எடுத்தல், பழந்துணி, கந்தைவைக்கோல் புல், வாயடித்தல் இவைகளாலும் மற்றும் சனிக்குஉரிய காரகங்களாலும் தனமடைவார். கிராம, நகரக் கணக்கு வேலைகளாலும் தலைமைத்தன்மையாலும் தனம்வரும்.

(22) பத்தாமிடத்திலுள்ள சூரியனைச் செவ்வாய் பார்த்தால் உத்தியோகம், சாஸ்திர ஆராய்ச்சி, ரசவாதம் கட்டம் மருந்துகள் மந்திர தந்திர யந்திராதிகள் இன்னம் செவ்வாய்க்குச் சொல்லிய காரகங்களிவற்றாலும் அன்னிய கர்மங்கள் செய்தலும் மாற்றுந் தாயால் தனமும் அடைவான்.

(23) புத சுக்கிரர் 10 மிடத்திலுள்ள சூரியனுடன் கூடின் கல்வியாலும் கவியாலும், நாடக அலங்காரகாவியாதிகளாலும் பிரபல வியாபார மூலமும் தனம்வரும். சனி குரு கூடின் நம்பி ஏமாற்றல், கொடுத்த தனம் நஷ்டம். இருந்த சொத்துபோய் திரும்பக் கொஞ்சம் கொஞ்சமாக லபித்தல், சிலர் விரோதமும் சிலர் சினேகிதமும் வரவும் செலவும் சமமாகிவிடும். ஆயினும் கங்கா யாத்திராதி யாத்திரை செய்தும், சன்னியாசியாகி அல்லது மடாதிபத்தியமடைந்து வெகு சிஷ்யர்களுடன் கூடி பல வழிகளிலும்

தனமடைந்து பல வழிகளாலும் செலவுமுண்டாகும். சில ஜாதக விஷயத்தில் பரபல உத்தியோகம் நேரிடும், ஆயினும் கடைசியில் பங்கமே நேரிடும்.

2-வது அத்தியாயம்.

—o—

ஜேன்ம லக்கின சந்திர லக்கினங்களுக்குப் பத்தாமிடத்தில் உள்ள கிரகங்களால் சோல்லப்பட்டிருப்பவை போக இனி கிரகங்களைக் குறித்துப் பலன் சோல்லப்படுகிறது:—

(1) ஜீவனஸ்தானமாகிய பத்தாமிடத்தில் சூரியனிருந்தால் ராஜாங்காதி உத்தியோகம் முதலிய முன் சொல்லியவற்றாலும், மேலும் மேற்படி சூரியன் சனி செவ்வாயிவர்களுடன் கூடியிருந்தால் எத்தொழிலும் வஞ்சனை, மித்திர துரோகம், சூது, கபடம் முதலிய உடையதும், வக்கீலாகவும், வயித்தியனாகவும், தண்டிக்கும் அதிகாரம் உள்ளவனாகவும், செய்கையில் அனியாய வழியில் சம்பாத்தியமும் அடைவான், லோபியாவன்.

(2) 10 மிடத்தில் சூரியன் சனி செவ்வாய் கேது இவர்களிருந்தால் சாஸ்திர மார்க்கம் ஆராய்ச்சி, ரசாயனம் முதலியன வேதமோதல், பயிரில் பலன், (வியாபாரம் தீபாந்திர வஸ்துக்களால் தனம் ராஜாங்க சம்பந்தம் உள்ளது) இவற்றால் தனமும் பிரபல சிக்ஷதக்ஷாதிகாரமும் உண்டாகும், பிதுரு கருமம் செய்யான் அல்லது பிதாவுடன் துவேஷமுடையவன். குரு துவேஷமுடையவன், செய் நன்றி மறப்பவன் பாலியத்தில் தாயை யிழந்து விடுவான், புத்திர வஞ்சனை செய்வான் ஜன துவேஷியாவன், அபவாதமுடையவன். தயையில்லாதவன் மூர்க்கன், தர்மகுணமுண்டாகும், பலதார போகி, குரூர கிருத்தியங்களுடையவன், திரவியத்தை யழித்து துன்மார்க்கனாவன். மாதுருவம்ச கருமம் செய்வான் மாற்றாந்தாயுடையவன். சகோதரனுக்கு விரோதி, கங்கா யாத்திராதி புண்ணியங்களுடையவன்.

(3) 10 மிடத்திலுள்ள சூரியன் புதன் குரு செவ்வாய் சுக்கிரன் சனி ராகு இவர்களால் விசேஷ கல்வியும், புதுப்புது ஆராய்ச்சியும் பிரபல சர்வாதிகாரமும் ஜனபவாதமும் காம

முடையவனுமாவன். ஜபதபாதிகளில்லாதவன் பாபம் புண்ணியம் சமமாயுடையவன் பூமி வீடு வாகனாதி சுகம் உடையவன். பயந்த வன் உறவினரில் மேன்மையுடைவனுவன், குலப்பிரசித்தியுடைய வனுவன், அந்திய வயதிலாவது பாலியவயதிலாவது வெகு யோக மடைவான். சில காலம் ஐந்தல்லது ஏழு அல்லது பன்னிரண்டு வருஷம் கஷ்டமடைவான். வியாகூலமுண்டாகும். தத்துப் புத்திரனையுடையவன், அவனும் ஆபத்துக் காலத்தில் சமீபத்தி லிரான், ஸ்திரீயினுல் மேன்மையுடையவன் துர்க்குணமுள்ள மனைவியுடையவன் அல்லது ராஜசன்னியாசியாகிப் பிரபல வாழ்வுடையவனுவன், சுகீ, வாத நோயுடையவன், புத்திர மரணத்தினுல் வருந்துவான் கடைசி காலத்தில் வெளி தேசவாச முண்டாகும். சுபசோபனுதிகளுடையவனுவன்.

(4) மேற்படி 10 மிடத்தில் குரு சந்திரன் சூரியனிவர் களிருந்தால் ஜாதகனுக்கு ராஜாங்கத்தில் பெரிய கல்விச்சாலை களில் உபாத்திமைத் தொழிலும் பூமி பலிதமும் நேரிடும்.

(5) பத்தில் குரு, செவ்வாய், சூரியனிவர்களிருந்தால் பெரிய விக்ஞானியாகவும் சாஸ்திர மேதாவியாகவும் ஆகி பிரபல உத்தியோகத்தினுல் தனமடைவாள்.

(6) பத்தில் குரு, செவ்வாய், சந்திரனிவர்கள் கூடியிருப்பின் கேசரி யோகம் மங்களயோகம் இவைகளால் மன்னர்களும் வணங்குந் தன்மையும் ராஜசம்போகியும் வெகு பூமிக்கதிகாரியாக வும் ராணுவம் போலீஸ் அல்லது பாங்கு கஜானு இவைகளில் தலைமை உத்தியோகமுண்டு.

(7) 10-ல் குரு, சுக்கிர, புதன் கூடில் கல்வியும் சங்கீதமும் வாகனமும் வியாபாரமும் சாஸ்திர புராணங்கள் படித்தலும் செய்து தனமடைவான் என்றுளது,

(8) 10-ல் குரு சுக்கிர செவ்வாய் கூடில் பிரபல வியாபார மும் ராஜ மந்திரித்துவமும் பசு பால் இவைகளால் தனமும் ஓட்டல் முதலியவைகளாலும் தனமடைவான்.

(9) 10-ல் குரு செவ்வாய் புதன் கூடில் படிப்பின் மூலம் விவாதமும் தலைமையும், நீதி வழங்கலுமுண்டாகும்.

(10) மேற்படி பத்தாமிடத்தில் செவ்வாய் சூரியன் சனி குரு கூடில் நியாயாதிபதியாவார், கடின தண்டனையிடும் சுபாவம் உண்டு.

(11) கேது, செவ்வாய், புதன், சனி 10-ல் கூடில் பிரபல பிரசங்கியாகியும் உக்கிர தண்டனையிடும் தன்மையும் ஜீரணோத் தாரணம் அல்லது கண்டிராக்டாலும் தனம் வரும்.

(12) கேது, குரு, சனி 10-ல் கூடில் சாஸ்திர பரிசீலனையும் வேதாந்த பரிசீலனையும் செய்வதால் தனம்வரும்.

(13) செவ்வாய் சூரியன் சந்திரன் சனி 10-ல் கூடில் எண்ணை நெருப்பு உயிர் சம்பந்தமான இன்ஸ்யூரன்ஸ் முதலியவை களால் தனம்தரும்.

(14) செவ்வாய் சூரியன் சந்திரன் சுக்கிரன் 10-ல் கூடில் உத்தியோகம் மருந்து வஸ்திரம், வியாபாரம் முதலியவற்றால் தனம் உண்டாகும்.

(15) சூரியன், செவ்வாய், புதன், சந்திரன் 10-ல் கூடில் அச்சாபீஸ் சிற்பச்சாலை, எஞ்ஜினீயர் பவழம் முத்து முதலிய வியாபாரம்.

(16) செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் 10-ல் கூடில் பயிர்த் தொழில் பால் பசு பழம் விளையாட்டு சாமான் வெள்ளி வஸ்திரம் வியாபாரம்.

(17) செவ்வாய், சனி, சந்திரன், புதன் 10-ல் கூடில் அச்சு யந்திரங்கள், மெஷின்கள் பாரமான சிலைகள் கணக்கு, வளையல் கள் பேபர், கந்தை முதலிய வியாபாரம், மிளகாயும் துவரையும் வியாபாரம் உண்டு.

(18) குரு, சனி, புதன், சந்திரன் 10-ல் கூடில் பயிர்த் தொழில் புரோகிதம் இரும்பு முதலியன வியாபாரம் உண்டு.

(19) சனி ராகு 10-ல் கூடில் இரும்பு, தார் முதலியன வியாபாரம்.

(20) சனி ராகு சந்திரன் 10-ல் கூடில் ஜெயில், ஜல மீது சஞ்சாரம் மூலம், ஜோதிஷம் ஜனவஞ்சகம் வழிப்பறி செய்தல் உப்பு மூலமும் தனமுண்டு.

(21) சூரியன் கேது 10-ல் கூடில் வெளி தேச மரம் முதலியன வியாபாரம்.

(22) ராகு சந்திரன் சூரியன் செவ்வாய் 10-ல் கூடில் மூங்கில் கண்ணுடி தந்தி ஆபீஸ், ரேடியோ, எலக்டிரிக் முதலிய வற்றால் தனம்.

(23) சனி, ராகு, சூரியன் 10-ல் கூடில் ஜெயில், காடு மலை கிராமாந்திரமிவற்றில் உத்தியோகம். விஷ வைத்தியமிவற்ருலும் தனம்வரும்.

(24) சனி, ராகு, செவ்வாய்' சூரியன் 10-ல் கூடில் விஷ வைத்தியம், ரணரோகம், பல் வைத்தியம், கண் வைத்தியம். பொதுவாக வைத்தியம் இவற்ருல் தனம்வரும்.

(25) சுக்கிர சந்திரர் கூடி பத்தாம் வீட்டிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டிருந்தாலும் வைத்திய ஜீவனம் ரசவாதி, தாதுக்களை பஸ்பம் செய்து தனமடைவான்.

(26) சுக்கிர, சந்திர, புதன் 10-ல் கூடியிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் வைத்தியமே, நல்ல கைராசியுடையவனுகி சகல நோய்களையும் தீர்த்து தனமடைவான்.

(27) லக்கினத்திற்கு 2 அல்லது 4 மிடத்தில் சனிமட்டு மிருந்தால் தனுர் வித்தையறிவான்.

(28) 2, 4 மிடங்களில் கேது மட்டுமிருந்தால் கெடியாரம் செய்வான். அதில் வெகு நிபுணனுவன்.

(29) 2, 4 மிடங்களில் புதனிருந்தால் பெரிய குருத்துவ மடைவான்.

(30) 2, 4 மிடங்களில் ராகு இருந்தால் இரும்பு யந்திரம் முதலிய உற்பத்தி செய்வான்.

(31) கேது 2, 4 இந்த ஸ்தானங்களிலிருந்தால் கத்தி செய்தல், விற்றல், உபயோகப்படுத்தல் இவற்ருல் தனம் அடைவான்.

(32) செவ்வாய் மேற்படி ஸ்தானத்திலிருந்தால் சூலம், ஈட்டி, குந்தமென்னும் ஓர்வகை ஆயுதம் இவற்றைச் செய்தல் விற்றல் பிரயோகித்த லிவற்ருல் தனமடைவான்,

(33) சந்திரனும் குருவும், ஐந்து ஒன்பது ஒன்று இந்த ஸ்தானங்களிலிருந்தால் ஜாதகன் கிரந்த கர்த்தாவாகி எல்லா சாஸ்திரமும் கற்றும் போதித்தும் உண்மையான வழியில் சம்பாதிப்பான்.

(34) சுக்கிரன், ஒன்று அதாவது லக்கினம், 5, 9 இந்த ஸ்தானங்களிலிருந்தால் அற்ப கிரந்தம் செய்தல் அதாவது ஒரு சிறிய கிரந்தம் செய்வான், அதனுல் தனமடைவான், இது கவி

பாடுதல் பாட்டியற்றலுமாகும், சந்திரனின் பிள்ளையாகிய புதனுக்குமிப்படியே அறியவும். மேலும் சுக்கிரனிப்படி மேற்படி ஸ்தானங்களில் இருந்தால் காவிய கர்த்தாவாவான் பிராகுருத கிரந்தம் அதாவது முன் பழைய கிரந்தங்களை ஸாதாரண கிரந்தங்களைச் செய்து தனமடைவான்.

(35) குருவானவர் ஜன்ம லக்கினம் 5, 9 ஆகிய ஸ்தானங்களில் இருந்தால் சகல கிரந்தங்களையும் செய்வான். தர்க்கக் கிரந்தத்தில் சமர்த்தன் சகல கிரந்தங்களுடைய தனமடைவான் வியாகரண கிரந்த கர்த்தாவல்லது வியாகரணம் கற்று சபையை நடுங்கச் செய்வான்.

(36) சனி மேற்படி ஸ்தானங்களாகிய 1, 5, 9-ல் இருந்தால் வியாகரண வேதாந்தியாகி தனம் சேர்ப்பான்.

(37) புதன் 1, 5, 9-ல் இருந்தால் மீமாம்ச நிபுணனுவன். மீமாம்ச சாஸ்திரத்தினுல் தனமடைவான்.

(38) செவ்வாய் 1, 5, 9-ல் இருந்தால் நியாயசாஸ்திர நிபுணனுகி சுஷ்டுவான வாக்கியமுடையவனுகித் தனமடைவான்.

(39) சந்திரன் 1, 5, 9-ல் இருந்தால் சாங்கிய சாஸ்திர நிபுணனுகி தனம் சம்பாதிப்பான்.

(40) கேது 1, 5, 9-ல் இருந்தால் பிரபந்தகாரகனுகியும் ஜோதிட வித்துவானுகியும் உண்மையானபடி நல்வழியில் தனம் தேடுவான். கணித மேதாவியாவான் மேற்படி கேது, குருவுடன் கூடின் சம்பிரதாய சாஸ்திரத்தினுல் ஜீவிப்பான்.

(41) 9-மாதி 1-லும், 2-மாதி 9-லும் இருந்தால் 32-வயதுக்குப் பிறகு வாகனுதி(களால்) பாக்கியமுண்டாகும்.

(42) 10-ல் குரு இருந்தால் பிராதுரு ஜனங்களுடன் கூடி சம்பாதிப்பான்.

(43) 10-ல் சுக்கிரனிருந்தால் பாட்டு, நாட்டியம் முதலியவற்ருல் தனமும் ஷை சுக்கிரனுடன் கூடி 10-ல் ராகு இருந்தால் பட்டிண கிராமத் தலைவனுகவும் மந்திரியல்லது சேனுதிபதியாயும் இருந்து சம்பாதிப்பான்.

(44) 10-ல் சனியிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் சத்துரு துவேஷமும் புத்திர துவேஷமும் உண்டாகி சேர்க்கும் தன நாசமுண்டாகும்.

(45) 10-ல் சனி ராகு கூடியிருப்பின் மிலேச்சருடைய தனத்தை கெட்ட வழியாலடைவான்.

(46) 10-ல் புத, சந்திர, சுக்கிர, ராகு கூடில் சண்டாள யோகமுண்டாகி தனம் வந்தும் பிறருக்கு கஷ்டமுண்டு ண்ணுவான்.

(47) 10-ல் ரவி சந்திரரிருப்பின் சத்துரு நாசம் செய்து தனம் அடைவான், கீர்த்தியுண்டாகும்.

(48) 10-ல் செவ்வாய், புதன், குரு, சனி, சுக்கிரருப்பின் அரசன் அல்லது மந்திரி அல்லது பெரிய ஆசாரியன் இவ்விதமாக சந்தேகமின்றியாவான்.

(49) 10-ல் புதனும் குருவுமிருந்தால் யாகம் செய்து ஜீவிப்பான்.

(50) 10-ல் ராகு சூரியனிருந்தாலும் யாகம் செய்வான்.

(51) 10-ல் உச்சபுதனிருந்தால் யாகம் செய்து ஜீவிப்பான்.

(52) 4 கிரகம் 10-ல் இருந்தால் சன்னியாசியாகி ஜீவிப்பான்.

(53) ஒன்பதாமாதியுடன் சுக்கிரன் கூடியிருந்து 3-ல் சனி யிருந்தால் வெகு பாக்கியமுண்டாகும்.

(54) ஒன்பதாமாதி குருவால் பார்க்கப்பட்டாலும் ஒன்பதா மாதி நின்ற ராசிநாதன் 1, 4, 7, 10-ல் இருந்தாலும், 20 வயது முதல் வெகு பாக்கியமுண்டாகும்.

(55) புதன் பரமோச்சாம்சாத்தில் 9-ல் இருந்தாலும் 1-மாதி 9-ல் இருந்து குருவுடன் கூடியிருந்தால் 36 வயது முதல் தனவாகனுதி பாக்கிய முண்டாகும்.

(56) 11-மாதி 2-ல் இருந்து 2 மாதி, 1, 4, 7, 10 இவற்றில் இருந்து குருவுடன் கூடினுலும் குருவால் பார்க்கப்பட்டாலும் 36-ம் வயது முதல் 2000-ம் சம்பாதிப்பான்.

(57) 1, 4, 7, 10, 5, 9-ல் சுபருடன் கூடி இப்பாவநாதர் களிருப்பின் 40-வயது முதல் 1500 சம்பாதிப்பான்.

(58) 11-ல் குரு இருந்து 2-ல் சந்திரனும் 9-ல் சுக்கிரனு மிருந்தால் 6000 சம்பாதிப்பான்.

(59) 9-ல் குருவும் சுக்கிரனும் சந்திரனும், அல்லது குருவும் சந்திரனு மல்லது சுக்கிரனும் சந்திரனும் கூடியிருப்பின் தன தான்னிய ரத்னுதி ஆபரணங்களுடையவனுவன்.

(60) 11-மாதி 1-லும் 1-மாதி 11-லும் இருந்தால் 33 வயது முதல் ஆயிரம் தனம் சம்பாதிப்பான்.

(61) 2-மாதி 11-லும், 11-மாதி 2-லும் இருந்தால் கலியாணம் முதல் பாக்கியம் சேரும்.

(62) 3-மாதி 11-லும், 11-மாதி 3-லும் இருந்தால் சகோதரனுல் தன ஆபரணுதி சேர்க்கை யுண்டாகும்.

(63) 12-மாதி பாபருடன் கூடி 12-லும் பாபரிருந்தால் பாபராலும் பார்க்கப்பட்டால் தேசம் தேசம் போய்ச் சம்பாதிப்பான்.

(64) 12-மாதி சுபருடன் கூடி 12-லும் சுபரிருந்து சுபராலும் பார்க்கப்பட்டால் சுயதேச சஞ்சாரத்திலேயே தனம் உண்டாகும்.

(65) 12-ல் சனி முதலியோரிருந்து செவ்வாயுடனும் கூடினுல் சுபர் பார்வையிருந்தாலும் பாபத்தினுல் சம்பாதித்து அழிப்பான், அனியாய வழியில் சம்பாதனே உண்டு.

(66) 12-மாதி 1-லும், 1-மாதி 12-லும், இருந்து சுக்கிரனுடனும் கூடின் தர்ம வழியில் சம்பாத்தியம் உண்டு, செலவும் உண்டு.

(67) 7-மாதி உச்சராசியில் குருவுடன் கூடி ஒன்பதாமாதி 10-லுமிருந்தால் வெகுமானுதிகளடைந்து ஜீவிப்பான்.

(68) 10-ல் பாபரிருந்து 11-லும் பாபரிருந்தால் சுயஜனங்களேத் தூஷித்து தனமடைவான்.

(69) 10-மாதி 8-லும், 10-ல் ராகுவுமிருந்தால் ஜனத்துவேஷியாகி துர்வழியால் தனம் தேடுவான்.

(70) 11-மாதி 10-லும், 10-மாதி 1-லுமிருந்தாலும் இருவரும் கூடி கேந்திரமாகிய 1, 4, 7, 10 இவ்விடங்களிலிருந்தாலும் சுகஜீவனம் உண்டு.

(71) 10-ல் ரவி சேய் சனி ராகு இருப்பின் செய்யும் தொழில் எல்லாம் கெட்டு விடும்.

(72) 10-மாதி நீச்சமடைந்து 10-லும் பாபரிருந்து 7-லும் பாபரிருந்தாலும் தொழிலெல்லாம் கெடும்.

(73) 10-மாதி 9-லும், 1-மாதி 10-லுமிருந்து ஐந்தில் சந்திரனுமிருந்தால் தொழிலில் லாபமுண்டு.

(74) 2, 11-மாதிகள் 6-லும், 2, 11-ல் பாபரும் இருந்தாலும் தரித்திரமே யுண்டாகும்.

(75) 2, 11-மாதிகள் 2-ல் பாபருடன் கூடியிருந்தாலும் ஜன்மம் முதல் தரித்திரமே உண்டு. பிச்சை எடுத்தலால் ஜீவனம்.

(76) லக்கிஞதிபனும் குருவும் ஆறுக்குடையவனைப் பார்த்தால் அம்மானுல் சொத்துவரும், ஜீவனமும் அப்படியே உண்டு.

(77) செவ்வாய், சுக்கிரன், சந்திரன் மூவரும் கூடில் 30 வயதிலிருந்து ராஜாங்கப் பிரசித்தியும் வாகனுதியும் ஏற்படும்.

(78) 5, 9, 10க்குடையவர்கள் கூடி 6-ல் இருப்பின் 35 வயது முதல் யோகம் உண்டு. 5-மாதி திசை நடுவயதில் வந்தாலும் கடைவயதில் வந்தாலு மப்போது யோகம் விசேஷமாக வரும்.

(79) 1-ல் செவ்வாய், 12-ல் சனி, 3-ல் சந்திரன் இருந்தால் 27 வயது வரை கஷ்டம் உண்டு. பிறகு யோகம் உண்டாகும்.

(80) 5-ல் சனியிருந்தால் 30 வயது முதல் யோகம் உண்டாகும். மேற்படி சனி உச்சனுனல் புதிய வஸ்துவும் நீச்சமானுல் பழைய வஸ்துவும் விற்று தனம் உண்டாகும்.

(81) 2-ல் செவ்வாய், 7-ல் சந்திரன், 10-ல் குரு இவ்வாறிருந்தால் இருபத்தேழு வயது முதல் யோகம் உண்டு.

(82) 4-ல் செவ்வாயிருந்தால் 34 வயது முதல் யோகம் உண்டு. தாய் வமிசம் நாசமதாய் கிரக சங்கா பீடையுமடைவான்.

(83) 10-ல் ராகு இருந்தால் 20 வயது முதல் யோகம் ஆரம்பம்.

(84) 3-ல் செவ்வாய், 5-ல் சந்திரன் இருந்தால் பாலிய தரித்திரம் உண்டு. முப்பது வயது முதல் தனம் வரும்.

(85) 4-ல் ராகு (புனர்பூசம் 2-ல்) இருந்தால் 35 வயது முதல் யோகம் உண்டு. 4-ந் திசையாக ராகு திசையும் வந்தால் வெகு ராஜயோகம் உண்டு.

(86) 8, 10 மாதிகள் கூடில் அற்ப யோகம், கஷ்ட ஜீவனம் உண்டு.

(87) 5-ல் சனி, சூரியர் இருந்தால் 36, 37-வது வயதில் 100, 150 சம்பளத்தில் உத்தியோகம் உண்டு.

(88) 4-ல் சுக்கிரன், 1-ல் குரு இருந்தால் 21 வயது முதல் யோகம், இதற்கு இந்திரயோகம் என்ற பெயர் உண்டு.

(89) 1-மாதியும் 3-மாதியும் கூடி 11-ல் இருந்தால் 25 வயது முதல் யோக முண்டாகும்.

(90) 10-ல் சூரிய சுக்கிரருடன் லக்கிஞதிபதியும் கூடிஞல் 36 வயது முதல் யோகமுண்டாகும்.

(91) 3-ல் சனி, 5-ல் சுக்கிரனிருந்தால் 23 வயது முதல் தனம் சேரும்.

(92) சுக்கிரனும் சூரியனும் 11-ல் இருந்தால் பாட்டு மூலம் ஜீவனம் உண்டு.

(93) சுக்கிர சூரியருடன் புதனும் சனியும் கூடி 11-ல் இருந்தாலும் பாட்டால் ஜீவனம் உண்டு.

(94) 7-ல் சூரியன் (சுயக்ஷேத்திரமாகின்) 20 வயது முதல் தனம் வரும்.

(95) 1-மாதி 10-ல் இருந்தால் பிரபுக்களெல்லாம் சிநேகம், அதனுல் ஜீவனம் உண்டு. சுயார்ஜித முண்டாகும்,

(96) 11-ல் சனி, சுக்கிரனுடன் கூடிஞலும் பார்க்கப்பட்டாலும் மத்திய வயதில் தனஞ்சேரும்.

(97) 5-ல் சக்கிரன் புதன் சூரியன் மூவரும் கூடில் 27 வயது முதல் வாகனுதி பாக்கிய முண்டாகும்.

(98) 1, 9, 10, 5 இவ்விடங்களில் பலமுள்ள சுக்கிரனிருந்தால் தனமும் யோகமு முண்டாகும்.

(99) 10-மாதி சூரியனுடன் கூடிஞலும் ராஜசேவையால் தனமுண்டாகும்.

(100) 10-மாதியும் சந்திரனும் 1-ல் கூடிஞல் நீச்சனுல் ஜீவனம் உண்டு. 10-மாதி 1-ல் நீச்சனுகின் நீச்சராலும் உச்சமாகின் நல்வழியிலும் ஜீவனம் உண்டு.

(101) நீச்சக்கிரகம் சூரியனுடன் சர லக்கினத்தில் சேரில் வெளி தேசத்தில் பாக்கியம் உண்டு.

(102) 5-ல் இருக்கும் செவ்வாயைக் குரு 9-ம் பார்வையாகப் பார்த்தால் வேதாந்தம் கற்று (போதித்து) ஜீவனம் உண்டு.

(103) 2-ல் புதன் சூரியன் செவ்வாய் கூடில் சதாகாலமும் திரவிய லாபம் உண்டு. இது கடக லக்கினமாகில் விசேஷமாக உண்டு.

(104) 10-மாதி 2-ல் புதனுடன் கூடியிருந்து 10-ல் ராகு விருந்தால் புரோகித ஜீவனம் உண்டு.

(105) 10-மாதி 11-லிருந்தால் வியாபார ஜீவனம் உண்டு.

(106) 10-மாதி சனி வீட்டிலிருந்தாலும் 10-மிடத்தைச் சனி பார்த்தாலும் 10-மாதி சனியுடன் கூடினுலும் சூத்திரப் பிரபு அல்லது தாழ்ந்தவரிடம் உத்தியோக ஜீவனம் உண்டு.

(107) சூரியன் புதன் சுக்கிரனிவர்கள் கூடி 4-ல் இருந்தால் வியாபார மூலம் ஜீவனம், தனமுஞ் சேரும்.

(108) சூரியன் செவ்வாய் சுக்கிரனிவர்களும் கும்பத்திலிருக்கும் சனியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும் வியாபார ஜீவனம் உண்டு.

(109) நீச்சபங்க ராஜயோக கிரக திசை நடந்தால் 33-ம் வயது முதல் யோகம் உண்டாகித் தனம் சேரும்.

(110) நீச்சபங்க ராஜயோக கிரக திசை குரு திசையானுல் நீச்சப் பிரபுவால் 20, 25, 30, 35, 40, 46 இந்த வயது காலங்களில் 1000 ஆயிரத்துக்கு மேலும் சம்பாதனே யுண்டாம், பிறகு யோக பங்க மேற்பட்டாலும் ஆயுள் பூராவும் சுகமுண்டு. இந்த குரு உத்திராடம் 3-ல் இருந்தால் இப்பலன் விசேஷமாகப் பொருந்தும்.

(111) 10-மாதி 5-லும், 10-ல் சனியுமிருந்தால் வியாபார மூலம் ஜீவனம் உண்டு.

(112) 10-ல் சனி, கேது, சூரியனிவர்கள் மூவரும், கூடில் மந்திரம் ஜோசிய மிவற்றை யறிவான், இவற்ருல் ஜீவனம் உண்டு.

(113) சுக்கிரனும் செவ்வாயும் கூடில் க்ஷேத்திர பிரபுவால் ஜீவனம் உண்டு.

(114) சுக்கிர சந்திரர் கூடி 6-லும் 3-ல் செவ்வாயும் 10-ல் குருவு மிருந்தால் ராஜசேவை செய்வான்.

(115) 10-மாதி உச்சனுகில் வியாபார ஜீவனம் உண்டு.

(116) 10-மாதி 3-ல் இருந்தாலும் வியாபார ஜீவனமே உண்டு.

(117) லக்கினத்தில் 5 கிரகமிருந்தால் ஒன்றரை லக்ஷம் ஆஸ்தி யுண்டாகும்.

(118) 9, 10-மாதிகள் 10-லும், 2, 11-மாதிகள் 11-லுமிருந்தால் கீர்த்தியும் பாக்கியமும் ஆயுள்வரை யுண்டு.

(119) 10-ல் 5 கிரகம் கூடினும், 9-மாதி ராகுவுடன் கூடினும் தகப்பனுக்குப் புரோகித ஜீவனம் உண்டு.

(120) பஞ்சமாதிபதி சுக்கிரனுகி 1-ல் இருந்தால் சமுத்திர சமீப நகரத்தில் தீபாந்திர ஜல மார்க்க வஸ்து வியாபாரத்தால் ஜீவனம்; 30 வயது முதல் தனரத்தினுதிகமுடைய பிரபு சின்னமும் உண்டாகும்.

(121) 2-மிடத்தில் நாலு கிரகமிருந்தால் $1\frac{1}{2}$ லக்ஷம் ஆஸ்தி உண்டாகி வாக்கு வன்மையால் ஜீவனம் நடக்கும்.

(122) லக்கினத்தில் 4 கிரகம் கூடின் ராஜாங்க பிரசித்தியுண்டாகும்.

(123) சூரிய சுக்கிரர் சனியின் வீட்டிலிருந்தால் நியாயாதிபதியாவான்.

(124) 7-ல் குரு சூரியன் புதன் செவ்வாய் இருப்பினும் 8-ல் சுக்கிரனும், 9-ல் சூரியனுமிருப்பினும் 20 அல்லது 25 அல்லது 30 வயது இந்த காலங்களுக்கு மேல் ராஜாங்கத்தில் பிரசித்தி ஏற்படும்.

(125) 10-ல் கேது இருந்தால் கடின தண்டனையிடுவான். ஷை கேதுவுடன் சனி கூடினுமிப்படியே தண்டிப்பான். ஷை கேதுவை சனி பார்த்தால் ஷை. அதிகாரமேற்படாது, ஏற்பட்டாலும் அது குறைவடையும்.

(126) 10-மாதி புதனுடன் கூடின் கல்வியால் ஜீவனம் உண்டு.

(127) சூரியனுக்குப் பத்தில் சனியிருந்தாலும், லக்கினத்தில் சனியும் சூரியன் நாலிலு மிருந்தாலும் வியாபார ஜீவனம் உண்டு.

(128) 2-ல் குரு செவ்வாய் கூடில் பிதுரார்ஜித மூலம் ஜீவனம் உண்டு:

(129) 2-ல் குரு சனி செவ்வாய் மூவருமிருந்தால் பிதுரார்ஜிதமும் 2 கிராமமும் சுயார்ஜிதமும் உண்டாகும்.

(130) 10-மாதி 10-ல், ராகுவுடன் கூடினும் அல்லது ராகு புதனிருவருடனும் கூடினும் புரோகித மூலம் ஜீவனம் உண்டு.

(131) 10-ல் ராகுவும் 10-மாதி புதனுடன் கூடி 3-லுமிருந்தால் வியாபார ஜீவனம் உண்டு.

(132) 10-மாதி லக்கினத்திலிருந்து சந்திரனல் பார்க்கப் பட்டால் பயிர்த்தொழில்; பசு; பால் இவற்ருல் தனமும், ராஜாங் கப் பிரசித்தியும் ஏற்படும்.

(133) அசுவணி 1-ல் சந்திரனிருந்து செவ்வாய் மேஷத்தி லிருந்தால் 27-ம் வயது முதல் தனம் சம்பாதிப்பான், 20000 தனம் உத்தியோகத்திஞலடைவான்.

(134) 9-மாதி உச்சத்திலிருந்து 4-மாதியுடனும் கூடி யிருந்து லக்கினத்திற்கு 5-ல் சுக்கிரனிருந்தால் பன்னிரண்டு வருஷம் ராஜயோக முண்டாகும்.

(135) நாலு கிரகங்கள் உச்சத்தில் நீச்சாம்சத்திலிருந் தாலும் உச்சராசியில் மட்டுமிருந்தாலும் தரித்திரம், ஷை கிரகங் கள் நீச்சத்திலிருந்தாலும் உச்சாம்சத்தில் இருந்தால் வெகுயோக மேற்படும்.

(136) 3-ல் செவ்வாயிருந்து சிம்ம நாவம்சத்திலிருந்தால் 27 வயது முதல் சகோதரியின் கணவனல் உத்தியோகத்திஞல் தனமும் சேரும்.

(137) லக்கினத்தில் ராகு இருந்து சனி கூடினுலும் பார்த் தாலும் எப்போதும் ஜீவனக் கிலேசமுண்டு. விஷம் நெருப்பு இவை களால் கண்டம் உண்டு, இல்லையேல் ஜெயில் தண்டனை உண்டு, எப்போதும் ரோகம் மிலேச்ச ஹிம்சையுடையவன். பாபி, குரூரச் செய்கையுடையவன், பாபத்தை மறைப்பான், பாபத்தாலேயே ஜீவனம் செய்வான்.

(138) லக்கிஞதிபதி லக்கினத்திற்கு 3-ல் உச்சமாகி நவாம் சத்தில் சிம்மாம்சத்திலிருந்தால் 30 வயதில் கிலேசமுண்டு. 35 வயது முதல் பாக்கியமுண்டாகும், ஆயினும் மத்தியில் விசாரம் உண்டு.

(139) உத்திர நக்ஷத்திரத்தில் பிறந்தவனுக்குச் சூரியன் கும்பத்தில் இருந்தால் 35 வயதில் மூன்று லக்ஷத்திற்கதிபதி யாவான்.

(140) பஞ்சமாதிபதி உச்சஞகியிருந்தாலும் சனியுடன் கூடி தன் வீட்டிலிருந்தாலும் 21 வயது முதல் 16 வருஷம் யோக முண்டாகும்.

(141) ஒன்பதாம் ஆரூடாதிபதி நின்ற ராசிநாதன் குரு ஆகி கேசரி யோகத்தில் பிறந்தவனுக்கு 22 வயது முதல் யோக திசை யுண்டாகும், 25 வயதானல், பிரபலமடைவான்.

(142) 5-ல் சுக்கிரன் 3-ல் சனி இப்படியிருந்தால் ஜன்மம் முதல் ஆயுசு வரையில் தனமிருக்கும்.

(143) லக்கினத்தில் சர்வாஷ்டகவர்க்கப்பரல் எத்தனை யுள்ளதோ அத்தனை வயது கழித்து தனம் சம்பாதிப்பான்.

(144) லக்கினத்தில் குருவும் மதியும் கூடில் 18 வயது முதல் தனம் சேரும்.

(145) ரேவதி நக்ஷத்திரம் 3-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரம் ஆகி, 9, 10-மாதிகள் மகர ஜன்ம லக்கினத்திலும் லக்கினத்திற்கு 2-ல் சனியுமிருந்தால் 20 வயது முதல் பாக்கியம் 10 வருஷம்வரை குறைவில்லாதிருக்கும்.

(146) ரேவதி 3-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி மகர லக்கினத்தில் 8, 9, 10 மாதிகள் கூடில் 24 வயது முதல் 6 வருஷம் யோகமுண்டாகும், பிறகு இந்த யோகத்திற்கு பங்கமுண்டாகும்.

(147) கன்னி துலாமிவற்றில் ராகு, ரிஷப நவாம்சத்திலிருந் தால் 20 வயது முதல் பாக்கியமுண்டாகும். 24 வயது முதல் 8 வருஷம் வெகு யோகம் உண்டு.

(148) சூரியன், புதன், செவ்வாய் மூவரும் நல்ல பாவத்தில் துலாத்திலும் சிம்மத்தில் சுக்கிரனுமிருந்தால் வெகு பாக்கியம் உண்டு.

(149) மேஷத்தில் சிம்மநவாம்சத்தில் சனியிருந்தால் வாலி பத்தில் தரித்திரம். 30 வயது முதல் தனஞ்சேரும், மூர்சை வாயு பீடையுண்டாகும்.

(150) மேஷ சனி சுபருடன் கூடி அசுவணி 1-ல் அல்லது பரணி 4-ல் இருந்தால் 20 வயது முதல் தனம் வரும்.

(151) சனியும் புதனும் கூடி மேஷத்தில் இருந்தால் மனைவி யால் பாக்கியம் வரும். புதன் 7-மாதியாகின் இப்பலன் விசேஷ மாகும்.

(152) கடகச் சந்திரன் விருச்சிக குரு ஆனல் 40 வயதுக்கு மேல் 2, 3 வருஷம் ராஜாங்கத்தில் யோகம் உண்டு, தனம் சேரும்.

(153) கன்னியில் சந்திரன் தனுசில் குரு, இப்படியாகில் 27-ம் வயது முதல் பாக்கியம் உண்டு.

(154) உத்திரட்டாதி 4-ல் சந்திரனிருக்கப் பிறந்தவனுக் குச் சனி கடகத்திலிருந்தால் 30 வயது முதல் யோகம் உண்டு.

(155) பூரம் 4-ம் பாதத்தில் பிறந்தவனுக்குச் செவ்வாய் ரிஷபத்தில் கிருத்திகை நக்ஷத்திரம் 3-ம் பாதத்திலிருந்தால் 28

அல்லது 35 வயது முதல் ஆயிரத்தறுநூறு தனம் பிரதி மாதம் சம்பாதிப்பான்.

(156) மேஷத்தில் செவ்வாயும் சந்திரனும் கும்பத்தில் சூரியனும் புதனும் கூடில் வியாபாரம் உத்தியோக மிரண்டும் உண்டாகும்.

(157) 2, 9 மிடங்களில் ராகு இருந்தால் ஜாதகனுக்கும் அவன் சகோதரனுக்கும் அல்லது சகோதரியின் கணவனுக்கும் ஈனத்தொழிலில் தனம் வரும்.

(158) 10-ல் சுக்கிரன், 11-ல் செவ்வாய், 12-ல் சனி, இப்படி கிரகமுள்ளவன் பற்பல வியாபாரம் செய்து திரவியம் சேர்ப்பான்.

(159) புனர்ப்பூசம் ஓராவது பாதத்தில் சந்திரனிருக்க பிறந்தவனுக்கு மீனத்தில் செவ்வாயும் மேஷத்தில் சனியுமிருந்தால் உத்தியோகம் பயிர் இவைகளிரண்டாலும் தனம் சேரும்.

(160) லக்கினதிபதி 10-லும் 10-மாதி 9-லும் இருந்தால் உத்தியோக ஜீவனம் உண்டு. ராஜவசியர் ஆவான்.

(161) அனுஷத்தில் சந்திரனிருந்து மகர லக்கினத்தில் பிறந்தவனுக்கு ஜன்ம லக்கினதிபதி பத்தில் உச்சனுகியிருந்து சுக்கிர திசைவரின் அனேக கிராமங்களுக்கு அதிகாரமேற்படும்.

(162) சுக்கிரன் உச்சத்திலிருந்து உச்சத்திலிருக்கும் குருவால் பார்க்கப்பட்டிருந்தால் உத்தியோக ஜீவனம் உண்டு.

(163) 10-மாதியும் கேதுவும் கூடி 12-ல் இருந்தால் சித்த புருஷனுடைய சேர்க்கையால் தனமுண்டாகும். அதனுல் ஜீவனமேற்படும். இவர்களை உச்ச குரு பார்க்கின் விசேஷ பலனுண்டு.

(164) 10-மாதி ராகுவுடன் கூடி, 8-ல் இருந்தால் நீச்ச வழியால் ஜீவனம் உண்டு.

(165) 10-மாதி சுயக்ஷேத்திரத்தில் செவ்வாய், சனி இவர்களுடன் கூடினுலும், 10-மாதி 11-மாதியுடன் கூடி 11-ல் இருந்தாலும் பயிர்த் தொழிலால் ஜீவனம் உண்டு. பிரபுக்களிடம் பயிர் தொழிலில் உத்தியோக ஜீவனம் உண்டு.

(166) 10-ல் சூரிய சுக்ர குஜர் கூடினுல் ரத்தின வியாபாரத்தாலும், பல வழியாலும் தனம் வரும், இதற்கே சனி இவர்களைப் பார்த்தாலுமிப்படியே தனம் வரும்.

(167) 10-மாதி 5-லும், 10-ல் சனியுமிருந்தால் வியாபார ஜீவனம் உண்டு.

(168) 10-ல் சனி, கேது கூடினுலும் 10-ல் கேது இருந்து சனி ஷி. கேதுவைப் பார்த்தால் ஜோதிடத்தினுல் ஜீவனம் உண்டு, சிலர் வியாபார ஜீவனமும் உண்டு என்று சொல்லுகிருர்கள்.

(169) பஞ்சமாதிபதி லக்கினத்திலிருந்து 10-மாதியால் பார்க்கப்பட்டாலும், ஜோதிடத்தினுல் ஜீவனம் உண்டு. வேறு சில கிரந்தங்களில் வியாபார முன்டென்றுந் தெரிகிறது.

(170) 10-மாதி சந்திரனுடன் கூடி 6-ல் இருந்து குருவும் செவ்வாயு மிவர்களைப் பார்த்தால் ராஜசேவையால் தனம் வரும்.

(171) 11-ல் குரு, சுக்கிர, புத, சூரியர் கூடில் 28 முதல் யோகமுண்டாகும், சில ரிஷிகள் மதப்படி 25 வயது முதல் தன முண்டாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(172) 12-மாதி 10-ல் இருந்து 9-மாதியால் பார்க்கப்பட்டு 10-மாதி சந்திரனுக்கிரண்டிலிருந்தால் 29 அல்லது 30-வது வயதில் நீச்ச பாஷையால் 10 அல்லது 15 (நிஷ்க) வராகன் சம்பளமுள்ள உத்தியோக முண்டாகும்.

(173) 2, 9-க்குடையவர்கள் கூடி 5-மிடத்திலிருந்தால் மறு ஜன்மத்தில் பாக்கியமுண்டாகும்.

(174) 4, 9, 10-மாதிகள் கூடி ஐந்தாமிடத்திலிருந்தால் தேவாலயம், மடாதிபத்திய மிவற்றை யடைந்து நியாய விசாரணை மூலம் ஜீவனம் உண்டு,

(175) ஓராமிடத்திற்குரியவன் உச்சமாகி 3-வது வீட்டில் நவாம்சத்தில் இருந்தால் 35 வயது முதல் தனம் சம்பாதிப்பான்.

(176) நீச்சபங்க ராஜயோகப் பலன் 30 அல்லது 35 வயது முதல் நேர்ந்து யோகமும் தனமும் உண்டாகும்.

(177) தாமினி யோக முண்டானுல் அந்த யோகம் 16, 26, 30 இந்த வயது காலங்களில் உண்டாகும்.

(178) 9, 10, 11-க்குடையவர்கள் 10-ல் கூடின் ஆயுள் வரையில் பாக்கிய மழியாது, சுகஜீவனம் உண்டு.

(179) சந்திராதி யோகம் என்ற சந்திரனுக்கு 6, 7, 8-ல் சுபக்கிரகமிருக்கும் அதியோகத்தில் பங்கமில்லாவிடில் 5 மிடத்தில் பாபரிருந்தாலும் 30 வயது முதல்தான் யோகம் உண்டு,

(180) சந்திரனுக்கு 4-ல் குரு, 7-ல் சனி யிருந்தாலும், 9, 10, 12-க்குடையவர்கள் கூடிப் பத்திலிருந்தாலும் 32 வயது முதல் 62 வயதுவரை ஒரே யோகம் துடர்ந்து நடக்கும்.

(181) சூரியனும் புதனும் ஒரே ராசியிலிருந்து குரு (உச்சத்தில்) 10-ல் இருந்தாலும் 12-ல் இருந்தாலும் 42 வயது முதல் தனஞ்சேரும். யோகம் உண்டாம்.

(182) 4, 11-க்குடையவர் கூடி 2-மாதியால் பார்க்கப்பட்டால் 30 வயது முதல் 50 வயதுவரையில் விசேஷ யோகமுண்டாகும். பிள்ளை பிறந்த 10-ம் வருஷம் வீட்டில் புதையலால் 5000 பொன் கிடைக்கும்.

(183) 1-மாதி 11-ல், 2-மாதி 9-ல் இருக்க, 9-மாதி 12-ல் சுயக்ஷேத்திரமானாலும், 10-மாதி 4, 5-க்குடையவருடன் கூடினாலும் 16 வயது முதல் 56 வயதுவரை பிரபல யோகமே நடக்கும்.

(184) 1, 9, 11-மாதிகள் 4-ல் இருந்து 8-ல் உள்ள குருவால் இவர்கள் பார்க்கப்பட்டால் 12 வயது முதல் 42 வயதுவரை யோகமும் அம்மானால் சொத்தும்வரும். அம்மான் சொத்தும்வரும்.

(185) 10-மாதி 4-லும், 4-மாதி 3-லும் இருந்து, 2-மாதி 5-ல் வர்க்கோத்தமமாக இருக்கும் கேதுவுடன் கூடி இருப்பின், பாலியம் அல்லது 10-ம் வயதில் பெரிய மடாதிபத்தியமடைந்து சொத்து விஷயமாக வியாச்சியம் செய்து 30 அல்லது 31 வருஷம் சென்று 40 அல்லது 41-ல் சொத்தை அடைவான்.

(186) 2-ல் சனி, புத, சூரியன் கூடியிருந்து, 4-மாதி 4-லும், 2-மாதி லக்கினத்திலுமிருந்தால் 21 வயது முதலாக யோகம் உண்டு. நல்ல ஜீவனம் உண்டு.

(187) லக்கினாதிபதி 2-ல் 7, 5-மாதிகளுடன் கூடினாலும் 4-மாதி 4-லும், 2-மாதி 1-லும் இருந்தாலும் 21 வயதுமுதல் தனஞ் சம்பாதிப்பான்.

(188) சுக்கிரனும் கேதுவும் கூடில் 50 வயதுக்கு மேலிருந்து பிரபு வழியால் தனம் வரும். 16-ம் வயதிலிருந்து பிரசித்தியடைவான். 20, 25, 30, 40-ல் தனமுண்டாகும். மனைவியால் திரவிய விரையம் உண்டாகும்.

(189) லக்கினாதிபதி 3-மாதியுடன் கூடி 11-ல் இருந்தால் 25 வயது முதல் உத்தியோக ஜீவனம் உண்டு.

(190) சுக்கிர சந்திரர் கூடி 11-ல் இருந்தால் 25 வயது முதல் ஜீவனமுண்டு, தனஞ்சேரும்.

(191) 1-மாதிக்கு 2-ல் குரு, 3-ல் பாபர் இப்படியிருக்கின் ராஜமுத்ராதிகாரமுள்ள உத்தியோக ஜீவனம் உண்டு.

(192) 1-மாதி 2-ல் அல்லது உச்சத்தில் அல்லது 11-ல் இருந்து லக்கினத்துக்கு 3-ல் பாபரிருந்தாலும், ராஜயோகமும், ராஜமுத்திராதிகார உத்தியோக ஜீவனமும் உண்டு.

(193) 4, 5-க்குடையவர்கள் 1-லும், 1, 3-மாதிபதிகள் 1லும் இருந்தால் 3 வாகனுதிகள் லாபம் உண்டு.

(194) சுக்கிரன் 5-ல் இருந்தால் 35 வயது முதல் யோகமும், 37 முதல் ராஜயோகமும் உண்டு. இவன் திசை வந்தாலதில் (வியாபாரத்தில்) பிரபலம் உண்டாகும்.

(195) 1-மாதி 5-ல் ராகுவுடன் கூடில் 37 வயது முதல் பிரயத்தினப்படாமலே அதிகார உத்தியோகம் உண்டு.

(196) 7-ல் சூரியன் இருந்தால் 20 வயது முதல் யோகம் உண்டு.

(197) 2, 10-மாதிகள் 1-ல் கூடில் 25 வயது முதல் வெளி தேசத்திலிருந்து லக்ஷ்மிகடாக்ஷமடைவான்.

(198) 7, 11-மாதிபதிகள் 7-லிருந்து லக்கினத்தில் சுக்கிரனுமிருந்தால் மனைவி வம்சத்தால் சுகமுண்டு. அழகிய மனைவியும் வாய்ப்பாள்.

(199) 1-ல் குரு சந்திரரும் 5-ல் செவ்வாயும் இருந்தால் 25 வயது முதல் தேவ க்ஷேத்திராதிகாரம், ராஜமுத்திராதிகாரம் உண்டு; ராஜமுத்திராதிகாரத்தினுலும் மந்திரித்துவத்தாலும் விசேஷ பலனுண்டாகும்.

(200) பூசத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவன் ரிஷபத்திலிருக்கும் கேது திசை வந்தால் அப்போது வெகு யோகத்தையடைவான்,

(201) 5, 6, 9, 10-க்குடையவர் 6-ல் ராகுவுடன் கூடின் இவர்களில் எவருடைய திசைவரினும் பிரபல யோகம் உண்டாகும்.

(202) 9, 10-மாதிபதிகள் கூடில் பெரும்பாலும் வியாபாரத்தினுல் ஜீவனம் உண்டு; மேற்படி யார்களுடைய திசையும் வந்தால் பிரபல ராஜயோகம் உண்டாகும்.

(203) 9, 10-மாதிகள் 4-ல் கூடில் ஸி. ஐ, டி. போலீஸ் அல்லது கடுமையாய்த் தண்டிக்கும் அதிகார மூலம் ஜீவனம் உண்டு.

(204) 9, 10-மாதிபதிகள் கூடி லக்கினத்தில் இருந்தால் நல்ல யோகம் உண்டு.

(205) லக்கினத்தில் 5 கிரகம் கூடில் பிரபு யோகம் உண்டு.

(206) 9, 10-மாதிபதிகள் 10-லும்; 2, 11-மாதிபதிகள் 11-லுமிருந்தால் மணிரத்ன பரிக்ஷை சொர்ண வியாபாரம் உண்டு.

(207) விருச்சிகத்திலுள்ள செவ்வாய் ராகு இவர்களுக்கு திசைவரில் ராகு திசையில் பிரபல யோகமுண்டாகும்.

(208) 4, 11-மாதிபதிகள் ஒரே யிடத்திலிருந்து 2-மாதியால் பார்க்கப்பட்டால் வீட்டில் புதையலில் தனம் கிடைக்கும்.

(209) 9-மாதி 4-லும், 4-மாதி 9-லும் இருந்தால் 30 வயது முதல் 50 வயதுவரை மேலும் மேலும் யோகம் பெருகும்.

(210) 1-மாதி 11-லும், 2-மாதி 9-லும், 9-மாதி 12-லும் இருந்தாலும், 4, 5-மாதிபதிகளும் 10-மாதியும் கூடி 9-லும் இருந்தாலும் 16 வயது முதல் 40 வருஷம்வரை யோகம் நடக்கும்.

(211) உத்திரட்டாதியில் பிறந்தவருக்கு குரு அனுஷம் 3-ல் இருந்தால் கணக்கன் அல்லது கிராம மணியம் உத்தியோகம் உண்டு. பசு தான்னிய சமர்த்தியுண்டாகும். தனமுமுண்டாகும்.

(212) மிருகசீரிஷம் 3, 4-ம் பாதத்தில் பிறந்தவன் (துலா லக்கின்த்திலும் பிறந்து) ஷை சந்திரனுடன் புதனும் கூடியிருந்தால் பாக்கியவானுகி ஜீவிப்பான்.

(213) மிருகசீரிஷம் 3, 4-ம் பாதத்தில் பிறந்தவனுக்கு மூலம், உத்திரட்டாதி இந்த நக்ஷத்திரங்களிலும் குரு இருந்தால் 16 வருஷம் துடர்ந்து ராஜயோகம் உண்டாகும்.

(214) உத்திரட்டாதி ஒராம் பாதத்தில் பிறந்தாலும், பூரட்டாதி 4-ம் பாதத்தில் பிறந்தாலும், ரேவதி 3-ம் பாதத்தில் பிறந்தாலும் 26 வயதுவரை தரித்திரம் உண்டு. பாலிய தரித்திரம் உண்டு. 27 வயது முதல் பாக்கியம் உண்டு.

(215) சித்திரை 3-ம் பாதத்தில் பிறந்தாருக்குச் சுவாதி 2-ம் பாதத்தில் செவ்வாயிருந்தால் திருடரால் தனம்வரும்.

(216) அனுஷத்தில் பிறந்தவருக்குக் குரு, சனி, செவ்வாய் மூவரும் உச்சமாகில் ஜன்ம வருஷம் தாய்க்குப் பீடை உண்டு. 3-ந் தெசையில் பாக்கியம் அடைவான். எப்போதும் (எழுத்து மூலம்) கணிதம் செய்துபடியிருப்பான். வெளி தேசத்தில் பாக்கியமடைவான்.

(217) சித்திரை 3, 4-ம் பாதத்தில் பிறந்தவருக்கு உத்திரட்டாதியில் குருவும், மூலத்தில் சுக்கிரனும் இருந்து சந்திரனுடன் சனியும் செவ்வாயும் கூடில் அவர் மகராஜனென்று பெரிய பெயரெடுப்பார்.

(218) கிருத்திகை 2, 3, 4-ம் பாதத்தில் பிறந்தவருக்குச் சுக்கிரன் ரோகிணியில் இருந்தால் விசேஷ பாக்கியமுண்டாகும்.

(219) உத்திரம் 3-வது பாதத்தில் பிறந்தவனுக்கு 30 வயதுக்கு மேல் ஐந்து வருஷம் வெகு யோகம் உண்டு.

(220) ரேவதி 4-ம் பாதத்தில் பிறந்தவர் வெகு பராக்கிரமும் சுகமும் அடைவார்.

(221) நான்கு கிரகங்கள் உச்சமடைந்து நல்ல பாவத்திலிராவிட்டால் ஜாதகர் தரித்திரத்தினுல் வருந்துவார்.

(222) லக்கினுதிபதிக்கிரண்டில் குருவும் பாப ருச்சத்திலும் ஐந்தாமிடத்தில் சுபருமிருந்தால் ராஜமுத்திராதிகாரத்தினுல் ஜீவனம் உண்டு.

(223) லக்கினத்தில் பாபரிருந்து அஷ்டமாதிபதியால் பார்க்கப்பட்டால் வியாதியும் 6-மாதியால் பார்க்கப்பட்டால் தரித்திரமும் உண்டாகும்.

(224) 1-ல் குரு, சுக்கிரரிருந்தால் மித்திர பந்துக்களைப் போஷிப்பான், சம்பத்துடையவன், விசேஷ சுகி, வெகு பேரை ரக்ஷிப்பான்.

(225) 5, 7-மாதிபதிகள் ஒன்று கூடி பஞ்சமத்தில் இருந்தால் 21 வயது முதல் 16 வருஷம் லக்ஷிமி கடாக்ஷம் உண்டாகும்.

(226) அனுஷம் 4-ம் பாதத்தில் பிறந்தவருக்கு சந்திரனுடன் கேது கூடியிருந்தால் கேது திசையில் சம்பத்துண்டாகும்.

(227) உத்திரட்டாதி 3, ரேவதி 3, பூரட்டாதி 4, இந்த நக்ஷத்திரங்களில் ஷெ பாதங்களில் பிறந்தவர்கள் அற்ப பாக்கியமடைவார்கள்.

(228) உத்திரம் 1-வது பாதத்தில் பிறந்தவருக்கு குரு அவிட்டம் 3-வது பாதத்திலிருந்தால் கோடீசுவரராவர். இருபத்தேழு வயதுக்கு மேல் யோகம் உண்டு.

(229) ஷஷ்டியம்சமாகிய கோராம்சத்தில் 10-மாதியிருந்தால் கோரத் தொழிலால் ஜீவனம்.

(230) குரு, கேதுவுடன் கூடி இருந்தால் பாஷண்டாச்சாரத்தினுல் ஜீவிப்பான்.

(231) சந்திர லக்கினத்திற்காவது ஜன்ம லக்கினத்திற்காவது 9-ல் ராகு இருந்தால் 30 வயதுக்கு மேல் 10 வருஷம் கிலேசமுண்டாகும்.

(232) திருவாதிரை, சுவாதி, சதயம் இந்த நக்ஷத்திரங்களிற் பிறந்தவர்களுக்குக் கேது தெசையில் சுகமுண்டாகும்; மேற்படி திசையில் யோகமுண்டாகும்.

(233) 2, 9-மாதிபதிகள் 4-ல் இருந்தால் 300-க்கு மேல் மாதம் சம்பாதிப்பான்.

(234) 10-மாதி ராகுவுடன் கூடின் வியாபார ஜீவனம் உண்டு.

(235) கேட்டையில் சந்திரனிருக்கப் பிறந்தவருக்குக் குருவும், சுக்கிரனும் கடகத்தில் இருந்தால் தினம் ஒன்றுக்கு 300 அல்லது 400 அல்லது 600 தனம் வியாபார லாபம் உண்டு. இதற்கே பூரட்டாதி 4-ம் பாதத்தில் சனியுமிருந்தால் தாயாதி தனமும்வரும் அல்லது சகோதரியாலாவது தனம்சேரும்.

(236) கேட்டையில் சந்திரனிருந்து மேஷ லக்கினத்தில் பிறந்தவனுக்குச் செவ்வாய் தெசை சுகம்தரும். ஷி செவ்வாய் திசை குரு புக்தியில் புத்திரி நாசமுண்டாகும்.

(237) கேட்டை 2-ம் பாதத்தில் பிறந்தவனுக்குச் சந்திர திசையில் அதிக கிலேசமும், சேர்த்த திரவிய மழிதலும், மனைவி நாசமும் சிசுக் கிலேசமும் உண்டாகும்.

(238) அனுஷத்தில் சந்திரனிருந்து ஜன்ம லக்கினம் ரிஷபமாகிப் பிறந்தவனுக்கு 5-ல் குருவும், சுக்கிரன் லக்கினத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டு செவ்வாயுடன் கூடி ஷி சுக்கிரனிருந்தால் 2 அல்லது 3 தாரம், புத்திரதோஷம் உண்டு, சேது ஸ்நானத்தினுல் புத்திர உற்பத்தி உண்டு. கேது திசையில் பல தேசங்களிலிருந்தும் தன வரவு உண்டு.

(239) சதயத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவனுக்கு ஜன்ம லக்கினம் துலாமாகி 9-ல் குரு இருந்தால் அந்த குரு திசையும் புத திசையும் விசேஷ யோகமுண்டாகும். புத திசையில் சுபர் புக்தியில் புத்திரி மரணமுண்டாகும். புத்திரனுல் புததிசையில் தனம் சேரும். புத தெசையில் சுயபுக்தியில் மனஸ்தாபாதி கஷ்டங்களுண்டாகும்.

(240) மிதுனம் ஜன்ம லக்கினமும் சதயம் ஜன்ம நக்ஷத்திரமுமாகில் பிறந்தவனுக்குச் சனி திசை யோகமாக நடக்கும் இவனுக்குக் கேது திசையிலும் பாக்கிய முண்டாகும்.

(241) மகரம் ஜன்ம லக்கினமும், சதயம் ஜன்ம நக்ஷத்திரமுமாகிப் பிறந்தவனுக்குச் சுக்கிரன் மிருகசீரிஷம் 2-ம் பாதத்தில் இருந்தால் தெசையின் பிற்பகுதியில் அதிக கிலேசமுண்டாகும், பிதாமகன் பாக்கியத்தினுல் ஜீவனம் உண்டு. இதற்கே சனி ரேவதி 4-ல் இருந்தால் வெகு வியாபாரத்தால் தனஞ்சேரும்.

(242) அசுவணியில் சந்திரனிருந்து ஜன்ம லக்கினம் சிம்மமாகிப் பிறந்தவனுக்குச் சூரியன், குரு, புத, சுக்கிரர் இவர்கள் 11-ல் இருந்தால் 1000-த்துக்கு மேல் சம்பாதிப்பான். சூரிய திசையிலும் வெகு தனம் சேரும், இதற்கே குரு திருவாதிரை 3-ல் இருந்தால் வெகு புத்திர சம்பத்தடைவான். மேற்படி சந்திரனுடைய திசை வந்தால் புத்திர நாசம், வீட்டில் சுபம் முதலியவைகளும் நேரிடும்.

(243) குருவும் சனியும் ஐந்திலிருந்தாலும், சுக்கிரனும் செவ்வாயும் ஐந்திலிருந்தாலும், 4, 5-மாதிபதிகள் 5-ல் இருந்தாலும் ஜோதிட மூலம் ஜீவனம்.

(244) 2, 9-மிடங்களில் ராகு இருந்தால் ஈனத்தொழிலால் ஜீவனம் ஜாதகனுடைய சகோதரனுக்குண்டாகும்.

(245) சந்திரனுக்குப் பன்னிரண்டாமிடத்தில் கும்பத்தில் சுக்கிரனிருந்தால் புரோகித மூலம் ஜீவனம் உண்டு.

(246) பரணியில் சந்திரனிருக்கப் பிறந்தவனுக்குக் குரு பரணி 4-ம் பாதத்தில் இருந்தால் கிராம மணியம் உத்தியோக ஜீவனம் உண்டு.

(247) மிருகசீரிஷம் 3, 4-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகப் பிறந்தால் திருவோணம் 4-ல் செவ்வாயுமிருந்தால் பிறர் திரவியத்தை அபகரிப்பான்.

(248) பத்தாமாதிபதி அஷ்டமாம்சத்தில் இருந்தால் தரித்திர ஜீவனம் உண்டு. பிச்சை எடுத்து ஜீவனம் உண்டு.

(249) 10-மாதிபதி 10-ல் பலவானுயிருந்தால் ரிஷபத்தில் பிறந்தவன் ராஜசமானனுவன்.

(250) 10-மாதி 11, 6 இந்த ஸ்தானுபதிகதிகளுடன் கூடினும் அற்பசுகம், அற்ப கஷ்டமிரண்டும் ஜீவனத்தில் உண்டாகும். இந்த 10-மாதியே 7-ல் இருந்தால் பிச்சையெடுத்து உண்பான்.

(251) பூரம் 4-ம் பாதத்தில் சந்திரனிருக்கப் பிறந்தால் ஐந்தாந் திசையில் தாயாதி சொத்துவரும், இதற்கு குரு ரிஷபத்தில் இருந்து, கடகம் லக்கினமானுல் விசேஷ பலன் உண்டு

(252) பூரம் 4-ம் பாதத்தில் சந்திரனிருந்து கிருத்திகை 1-வது பாதத்தில் சுக்கிரனிருந்தால் ஐந்தாந்திசையில் பாக்கிய விருத்தி ஏற்படும். இதற்கு ராகு கன்னியில் இருந்து லக்கினம் கடகமாஞல் 25 வயதில் அற்பபாக்கியமும் 35-க்கு மேல் வெகு பாக்கியம் சம்பாதிப்பான், இந்த ஜாதகன் மகாபாக்கியசாலி யாவான்.

(253) பரணி ஜன்ம நக்ஷத்திரமாகி ஜன்ம லக்கினுதிபதி உச்சாம்சத்திலிருந்தால் அந்த தெசையில் பாக்கியமுண்டாகும். ஜாதகனுடைய தகப்பன் பாக்கியத்தையுடையவன் (விருச்சி லக்கினத்திற்கு விசேஷ பலனுண்டு.)

(254) பரணி ஜன்ம நக்ஷத்திரமாகி மேஷத்தில் புதனிருந் தால் விருச்சிகம் மகர மிவைகள் ஜன்ம லக்கினமாகப் பிறந்த வர்கள் தனத்திற்காக வெளி சஞ்சாரமேயுடையவர்கள் ஆவார்கள்.

(255) குரு லக்கினத்திற்கு 4 மிடத்திலிருந்தால் விருத்தி யோகமுண்டாகி ஆயுள்வரை பாக்கியவிருத்தி சுகம் வாகனம் முதலியன உடையவனுவன். (இது குரு இருக்கும் இடம் ஸ்திர ராசியானுல் விசேஷ பலனுக நடக்கும்.)

(256) உத்திரட்டாதி ஜன்ம நக்ஷத்திரமாகிப் பிறந்தால், உத்திரட்டாதி 3-ல் சனியிருந்தால் 20 வயது முதல் விசேஷ பாக்கியமும் பாலியத்தில் தரித்திரமும் முப்பத்தேழு வயதுக்கு மேல் பாக்கிய நாசமும் நேரிடும்.

(257) 6, 8-மாதிபதிகள் பரிவர்த்தனையாகியிருந்து வேறு ஒரு கிரகத்தால் பார்க்கப்பட்டால் புரோகிதம் அறிந்து இன்னம் பலவிதத்தாலும் பிரபலதனவானுவாகி ஒரு காலத்தில் கஷ்ட மடைவான்.

(258) பூராடம் நான்காம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகிப் பிறந்தால் சனி திசையில் விசேஷ தனமடைவான்.

(259) ஆயில்ய நக்ஷத்திரம் நான்காம் பாதத்தில் பிறந் தால் ஜாதகன் சர்ப்பம் போன்றவன், தனமுடைய சாகஸக்காரன் கிருதக்ஞன், எதையும் உண்பவன், பிறரால் சம்பாத்தியமடை வான். நீச்ச சேவையுடையவன் ஆவன்.

(260) மூலம் 2, பூராடம் 3, இந்த நக்ஷத்திர பாதங்களில் பிறந்தாலும் சிம்மத்திலுள்ள ராகு திசை வரும்போது குரு புக்தி முதல் சம்பத்துண்டாகி நல்ல ஜீவனம் உண்டு.

(261) தனுசு லக்கினம் ஜன்ம லக்கினமாகி மேஷத்தில் கிருத்திகை 1-ல் சந்திரனுமிருந்து பிறந்த ஜாதகர்கள் செவ்வாய்

திசையில் பிற்பாகத்தில் பெரிய ஆபத்தையடைவார்கள். 35-க்கு மேல் 50 வரை சுகம் உண்டு. 50 முதல் 57 வயதுவரை சத்துரு பீடை மனஸ்தாபாதிகள் உண்டாகும். ஜீவனம் கஷ்டம் உண்டு.

(262) உத்திரட்டாதி 4-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகிப் பிறந்தால் 50 வயதிற்குப் பிறகு அற்ப சுகம் உண்டு. உத்திரட்டாதி 3-வது பாதத்தில் பிறந்தால் சுக்கிர திசையில் ருணமோசனமும் அதிக பாக்கியமும் 40 வயதுவரை சுகமும் பிறகு கஷ்டமும் பாக்கிய நாசமும் ஏற்படும். 41-ம் வயதில் 3-ம் பாத ஜாதகனுக்குக் கஷ்டமான கண்டமுண்டாகும்.

(263) தனுசில் ராகுவும் சந்திரனுமிருந்து தனுசு ஜன்ம லக்கினமாகிப் பிறந்தால் 30 வயது முதல் வியாபாரத்திஞல் தினம் 200 தனம் சம்பாதிப்பான்.

(264) மூலத்தில் சந்திரனிருந்து சந்திர லக்கினமே அதாவது தனுசு ஜன்மமாகிப் பிறந்தால் 3 வருஷம் சந்திர திசையில் ராஜ காரியத்தால் சிலேசமும் தன நாசமும் உண்டாகும். ஷை திசையின் கடைசியில் பிரயத்தினமின்றி 40 வயதுக்கு மேல் பசு தன தான்னியசமுர்த்திகள் வந்து சேரும்; இதற்கு 4, 9, 10-மாதிகள் கூடி துலாத்திலிருக்க வேண்டும்.

(265) மூலத்தில் சந்திரனும் சிம்மத்தில் ராகுவுமிருந்து தனுசு லக்கினத்தில் பிறந்தவன் ராகு திசையில் சேஞதிபதியல்லது மந்திரியாகி சர்வாதிகாரியாவான் 50 வருஷம்வரை யோகமுண்டு.

(266) மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவன் சந்திர திசை யோக பலஞகவும் செவ்வாய் திசையில் 2 வருஷம் யோகமும் அடைவான். செவ்வாய் தெசையில் மூன்று வருஷம், நிருத்தி யோகமாக கிலேசமடைவான்.

(267) மேஷத் திரிகோணத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 4-ல் இருந்தால் ஸ்திரி சேவையும் ராஜசம அந்தஸ்துமடைவான்.

(268) 5, 10-மாதிபதிகள் கூடி 11-ல் இருந்தாலும் ஜன்ம லக்கிஞதிபதியுடனும் கூடியிருந்தால் ஐசுவரியவாஞவான்.

(269) கடக லக்கினத்தில் பிறந்து, பூசம் ஜன்ம நக்ஷத்திரமாகி சனி, குரு, செவ்வாய் மூவரும் உச்சத்தில் உச்சாம்சத்திலிருந்து விலகிவிட்ட பிறகு ஜனித்தவன் சமுத்திர சமீப பட்டிணத்தில் மூட்டை சுமந்து ஜீவிப்பான். தகப்பன் பாக்கியவான் ஜாதகனும் பாக்கியவான், ரகசியத்தில் ஸ்திரீயால் தனம் சேரும். துர்ப்பலதேகி, ஆயினும் குபேரசம தனவாஞவான்.

(270) பூசத்தில் பிறந்தவனுக்குச் சனியும் குருவும் கூடில் சிற்ப சாஸ்திரத்தினுல் ஜீவனம் உண்டு.

(271) பூரத்தில் சந்திரனிருக்கப் பிறந்தால் சந்திரனுடன் சனியும் மகரத்தில் குருவும் இருந்து சகடயோகமானுல், பயிர்த் தொழிலால் ஜீவனம் உண்டு.

(272) ரேவதி 3-வது பாதத்தில் சந்திரன் இருந்து கடக லக்கினத்திற் பிறந்தால் மூன்ருந் திசையில் பிற்பாதியில் பிரபு சினேக மூலம் வடக்கு திக்கில் சுகமும் வெகு சிஷ்யர்களுடன் குருவாகி ராஜ தெரிசணையும் தேவாலயாதி பிரதிஷ்டைகளுடன் யாத்திரையும் செய்து ஜீவனம் செய்வான்.

(273) ஜன்ம லக்கினம் ரிஷபமும் அஸ்தம் 1-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமுமாகிப் பிறந்தால் 20 வயதுக்கு மேல் சுகமும் 25-ல் சுயஜனங்களால் சுகமும் 30-க்கு மேலும் 35-க்கு மேலும் மகாசுகமுண்டாகும்.

(274) புனர்பூசம் 1, 2, 3-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி ரிஷப லக்கினத்தில் பிறந்து சுக்கிரன் மகரத்திலிருந்தால் பயிர் மூலம் ஜீவனம் உண்டு. சுக்கிர திசையில் பஞ்சயக்ஞாதிகளுடன் சுகமடைவான்.

(275) புனர்வசு 1, 2, 3-ம் பாதந்தில் சந்திரனிருந்து ஜன்ம லக்கினம் தனுசு லக்கினமானுல் 11-ம் பாதத்தில் சந்திரனிருந்து ஜன்ம லக்கினம் தனுசு லக்கினமானுல் 11-ல் குரு புதனிருந்தால் பாட்டு மூலம் ஜீவனம் உண்டு.

(276) உத்திராடம் 2, 3, 4-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி மீனம் ஜன்ம லக்கினமாகிப் பிறந்து தனுசில் சுக்கிரனும் குருவும் இருந்து சகடயோக முண்டானுலும் வியாபாரத்தினுலும், பட்டு வியாபாரத்தினுலும் தனமுண்டாகும். இதற்கே ராகு மேஷத்திலிருந்தால் அந்த தெசையில் நல்ல யோகமும் ஷை குரு திசையில் நல்ல கீர்த்தியும் தர்ம சித்தியும் கும்பத்திலுள்ள சனி தெசையில் வெகு பாக்கியமும் உண்டாகும்.

(277) கேட்டையில் சந்திரனிருந்து மிதுன லக்கினம் ஜன்ம லக்கினமாகிப் பிறந்தால் 10-ல் சூரியனும் புதனுமிருந்தால் நீச்சரிடம் சேவகத் தொழிலால் ஜீவனம் உண்டு. ஷை சூரியனுடைய திசை வந்தால் அந்த திசையும் சந்திர திசையும் வியாபார விருத்தியும் உண்டாகும். இதற்கே கும்பத்தில் குருவும் செவ்வாயும் கூடியிருந்தால் அந்த தெசையில் வெகு பூமிக்கதிபதியாகிப் பிரபு

லக்ஷணமடைந்து தியாக போகாதிகளுடன் பற்பல தேசங்களிலும் புகழுண்டாகும்.

(278) பூர நக்ஷத்திரம் ஜன்ம நக்ஷத்திரமாகி விருச்சிக லக்கினத்தில் பிறந்து கன்னியில் குரு இருந்து சகடயோக முண்டானல் தேவாராதனையால் தனம் ஜீவனம் உண்டு.

(279) சுவாதி ஜன்ம நக்ஷத்திரமும் சிம்மலக்கினம் ஜனனமுமாகி விருச்சிகத்தில் குருவிருக்கும் சகட யோகத்திஞலும் 10-மாதி சனியின் வீட்டில் இருந்தால் ஜன்மம் முதல் பாக்கியமும், பிரபல உத்தியோகமும் க்ஷேத்திர பாக்கியமும் 20, 25, 30 இந்த வயதுகளில் யோகமும் ஆயுள்வரையில் சுகமும் ஏற்படும். ஷ்டி சந்திரகேந்திரத்தில் சனி சுபருடன் கூடியிருந்து சனி திசை வந்தால் உத்தியோகப் பிரசித்தியும் வெகு கிராமாதிகாரமும் பிரபுத்துவமுமடைவான்.

(280) விசாகம் நாலாம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமும், துலா லக்கினமும், தனுசு குருவும் உள்ள சகடயோகமானலும் சுக்கிரன் குருவுடன் கூடியிருந்தால் சுக்கிர திசையில் வியாபாரத்தால் தனம்சேரும்.

(281) திருவோணத்தில் சந்திரனிருந்து ஜன்ம லக்கினம் கன்னியாகின் பயிர்த் தொழிலில் ஜீவனமும் தனமும் உண்டு.

(282) விசாகம் 1, 2, 3-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் ஜன்ம லக்கினம் மேஷமுமாகி குருவும், செவ்வாயும் மிதுனத்திலிருந்தால் பிரபல வியாபார ஜீவனம். ஜன்மம் முதல் சுகமும் 20, 25, 30, 40-ல் விசேஷ யோகமும் கீர்த்தியுமுண்டாகும்.

(283) பூசம் ஜன்ம நக்ஷத்திரமாகி தனுசு லக்கினமாகப் பிறந்தால் சுக்கிரன் உச்சத்தில் இருக்கின் வியாபாரத்தில் 16 வயது முதல் பிரசித்தியும் சுக்கிர தெசையில் சொர்ண மூலம் பிரபல லாபமும் உண்டாகும்.

(284) மூலம் ஜன்ம நக்ஷத்திரமும் மிதுனம் ஜன்ம லக்கினமும் கடகத்தில் குரு இருக்கும் சகடயோகமானலும், பிதுரார்ஜிதத்துடன் கூடி கிராம வாசத்தில் பயிரில் விசேஷ சுகமும் மூன்ருந் தெசையில் பயிரிலும் சந்திர தெசையில் தெய்வயத்தினமாக விசேஷ தனமும், செவ்வாய் நீச்சராகியிலிருந்தால் செவ்வாய் தெசையில் சுபாசுப சமபலனும், மீனத்தில் ராகு இருந்து உச்ச குருவால் பார்க்கப்பட்டால் ராகு தெசையில் உத்தரோத்தரமாக பிரபலமும் உண்டாகும்.

(285) ரோகிணி ஜன்ம நக்ஷத்திரமும் மீனம் ஜன்ம லக்கின முமாகிப் பிறந்து கடகத்தில் சூரியனும் கன்னியில் செவ்வாயும் இருந்து லக்கின குருவால் பார்க்கப்பட்டால் தானம் வாங்குவ தாலும் வைதீகத்தாலும் ஜீவனம் உண்டு.

(286) ஹஸ்தம் ஜன்ம நக்ஷத்திரமும் கன்னியாலக்கினமு மாகி துலா குருவுள்ள சகடயோகமானாலும் அமலாயோக முண்டானால் பற்பல வஸ்து வியாபாரத்தாலும் தீபாந்திர வஸ்து வாலும் தனலாபம் ஜீவனம் உண்டு.

(287) ஜன்ம நக்ஷத்திரம் கேட்டையாகி ஜன்ம லக்கினம் மீனமுமாகிப் பிறந்தால் 2-ல் சூரியனும் 10-ல் செவ்வாயுமிருந் தால் சகோதரப் பிரபலமும் பிதுரார்ஜிதம், பயிர் இவற்றால் ஜீவனமும் அடைவார்கள். 35 வயதுக்குமேல் 10 வருஷம் வெகு சுகம் உண்டாகும். ஆயுள்வரை யோகமே உண்டு. இதற்கே மிதுன ராகு சந்திரனுக்கெட்டிருந்தாலும் சுக்கிரனுடன் கூடியிருந் தும், குருவால் பார்க்கப்பட்டால் ராகு தெசை உத்தரோத்தரமான பிரபலமுண்டாகும்.

(288) பூரம் ஜன்ம நக்ஷத்திரமாகி சிம்மமே லக்கினமாகப் பிறந்து லக்கின லாபாதிபதிகள் 5-ல் இருந்து குருவால் பார்க்கப் பட்டால் வியாபாரத்தில் பதினாறு வயது முதல் பிரசித்தி உண்டு. 20, 30, 40-ல் தீபாந்தர வஸ்துவால் பிரபல தனம்வரும். இதற்கே சுக்கிரனும் செவ்வாயும் சுயக்ஷேத்திரங்களிலிந்தாலும் ரத்தினம், தான்னியம், வஸ்திரமிவற்றால் தனம் சேரும்.

(289) அசுவணி நக்ஷத்திரம் ஜன்ம நக்ஷத்திரமும் மகரம் ஜன்ம லக்கினமுமாகிப் பிறந்தால் பயிர்த் தொழில் ஜீவனம் உண்டு. இதற்கே செவ்வாய் ராகு கூடி கன்னியிலிருந்தால் வேதாத்தியயனம், சமஸ்கிருதமிவற்றால் தனம் வரும்

(290) ஜன்ம நக்ஷத்திரம் ரேவதியாகி துலாம் ஜென்ம லக்கி னமாகப் பிறந்தால் கல்வியால் ஜீவிப்பான்.

(291) உத்திர நக்ஷத்திரம் 2, 3, 4-ம் பாதத்தில் சந்திர னிருந்து கடகத்தில் ஜனனமாகி ராகு விருச்சிகத்திலிருந்தால் பஞ்சு வியாபாரத்தினால் ராகு தெசையில் சுயப்பிரபலமாக விசேஷ தனமடைந்து பல வழிகளில் கஷ்டமும் லக்கினத்தினத்திலுள்ள குருவின் தெசையில் அழியாத சம்பத்தும் அடைவான்.

(292) அசுவணி ஜன்ம நக்ஷத்திரமாகி ரிஷப லக்கினம் ஜனனமானால் 24 வயதுவரையில் அற்பசுகமும் 25 முதல் சகோ தரனாலும் 35 முதல் சுயமாகவும் பிரபல உத்தியோகமடைந்து

40-ல் வெகு மேலான உத்தியோகமும் 45-ல் வாகனாதி பாக்கியமும் ஏற்படும். இதற்குப் புத சுக்கிரர் லக்கினத்திலிருந்தால் இப்பலன் நேரிடும்,

(293) கிருத்திகை 2, 3, 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி லக்கினம் சிம்மமாகிப் பிறந்தால் பதினாறு வயதில் பிரசித்தியும் 20-க்கு மேல் தன சம்பாதனையும் செவ்வாய், உச்சனாகி சுக்கிரனுடன் கூடி இருந்தால், செவ்வாய் தெசையில் பயிர்த்தொழிலால் தன லாபமும், லக்கினத்தில் ராகு இருந்தால் அந்த தெசையில் வெகுப் பிரசித்தியும் பிற்பாதியில் மனைவி வர்க்கத்தால் பிரசித்தியும் ராகு தெசை முதலில் சுயபுக்தியில் பத்னி மரணமும் பிறகு விசேஷ யோகமும் உண்டாகும்.

(294) ஜென்ம நக்ஷத்திரம் சுவாதி 1-ம் பாதமும் லக்கினம் சிம்மமுமாகிப் பிறந்தால் ஜாதகன் கர்த்தரியோக ஜாதகனாவான், தாயாதி சத்துரு கலாபத்தாலும் பல வழியாலும் தனத்தை நாசம் செய்வான். எப்போதும் சிவபூஜையாலும் சைவசாஸ்திரத்தாலும் தனமும் ஜீவனமும் உண்டு. லக்கினத்தில் குரு விருந்து அவர் திசையிலும் புதன் ஷை சந்திரனுடன் கூடியிருந்தால் அதிலும் விசேஷ வியாபார மூலம் தனமும் பிரபலமும் உண்டாகும்.

(295) ரோகிணி ஜன்ம நக்ஷத்திரமும் லக்கினம் கன்னியுமாகி குரு நீச்சமடைந்து நீச்சபங்கராஜயோக மேற்படின் பிதுரார்ஜித சுயார்ஜிதாதிகளாலும் உபாயத்தாலும் மாமனாராலும் 35 வயது முதல் குரு திசை பிற்பாதியிலும் ஷை சந்திரனுடன் சனி கூடினால் அந்த தெசையிலும் உத்தரோத்தரமான பாக்கிய லாபத்தை நாட்டிய வித்தை கற்றுக்கொடுத்தலாலும் பயிர் தொழிலாலும் அரசராலுமடைவான்.

(296) பூரம் 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும், கும்ப லக்கினமுமாகிப் பிறந்தால் வயது இருபது முதல் அற்ப தனமும் 25, 30-ல் யோகமும் நாற்பதாவது வயதில் வெகு பிரபலமும் சூத்திர சினேகிதமும், பிரபுவால் தனமும், சூத்திரனால் பிரமுகத்துவமும் அடைவான். இதற்கே குருவும், ராகுவும் தனுசில் இருந்தால் ராகு தெசையில் மேன்மையான பாக்கியமும் மருமகனால் பிரபலமும் மருமகன் பிரபலமும் ஆயுள்வரை சுகஜீவனமுமுடையவனாவன்.

(297) ஆயில்யம் 2-வது பாதத்தில் ஜன்ம நக்ஷத்திரமும் ஜன்ம லக்கினம் கும்பமும் ஆக ஜனித்தால் பிதுரார்ஜிதம் சொற்பமும் நல்ல போகமும் பின் வயதில் தனமுடையவனுமாவான்.

(298) ஜன்ம நக்ஷத்திரம் பூராடமும் கடக லக்கினமுமாகிப் பிறந்தால் செவ்வாய் மகரத்தில் குருவுடன் கூடியிருந்தால் செவ்வாய் தெசையில் க்ஷேத்திர சுகமும் வீட்டில் கல்யாணாதி சுப சோபனங்களும் பாக்கிய யோகமும் ராஜாங்க பிரசித்தியும் உண்டு. இதற்கே துலா ராசியில் ராகு இருந்தால் அந்த தெசையில் பற்பல தேசங்களில் பிரசித்தியும் தர்ம சித்தியும் ஷை குரு தெசையில் நிரந்தரமான அன்னதானாதிகளும் உண்டாகும்.

(299) பரணி ஜன்ம நக்ஷத்திரமாகி கும்பம் லக்கினமாகப் பிறந்து குருகேது மிதுனத்திலிருந்து சந்திர திசை வந்தால் சந்திர தெசையில் விசேஷ பிரசித்தி உண்டு. இதற்கே செவ்வாய் நீச்ச ராசியிலிருந்தால் அந்த தெசையில் சேர்ந்துவைத்த பாக்கிய நாசமும் லக்கினத்திற்குப் பதினொன்றில் ராகு இருந்து குருவால் பார்க்கப்பட்டால் அந்த ராகு தெசையில் என்றென்றும் அழிவில்லாத பாக்கியமும் ராஜத்துவாரானுகூலமாக தெசை முழுதும் பாக்கிய விருத்தியும் வீட்டில் லக்ஷ்மி வாஸமும் உண்டு. ராகு திசையிலேயே புது வீடு முதலான பாக்கியமும் தர்மங்களும் ஷை குரு தெசையில் சமயோகமும் உண்டாகும்.

(300) உத்திரட்டாதி ஜன்ம நக்ஷத்திரமாகி மகர லக்கினத்தில் பிறந்து 10 மாதி சூரியனுடன் கூடினால் அரசாங்கப் பிரசித்தியுண்டாகி ஜீவனம் உண்டு.

(301) சுவாதி ஜன்ம நக்ஷத்திரமும் மேஷ லக்கினமுமாகி ரிஷபத்தில் சனியிருந்தால் சனி திசையில் அற்ப சுகம் பிரசித்தி முதலியனவும் புதன் லக்கினத்திற்கேழில் இருந்தால் அந்த திசையில் உத்தியோக பிரசித்தியும் க்ஷேத்திரத்தினால் சுகமுமுண்டாகும்.

(302) உத்திராடம் 2. 3, 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி ஜன்ம லக்கினம் கும்பம் ஆகி 10 மாதி ராகுவுடன் விருச்சிகத்தில் கூடில் பிராம்மணர்களால் செய்யப்படும் அன்ன சிரார்த்தத்தில் உண்பவனாகியும் புரோகித மூலமும் 20, 25 வயதுமுதல் பிரசித்தியும் ஷை ராகு தெசையில் தன வரவும் அடைவான்.

(303) ஜன்ம நக்ஷத்திரம் ரோகிணியாகி, மேஷ லக்கினமுமாகி 10 மாதியும், சூரியனும் விருச்சிகத்திலிருந்தால் வஸ்திர வியாபார ஜீவனம் உண்டு.

(304) மகம் ஜன்ம நக்ஷத்திரமும் லக்கினம் துலாமும் ஆகிப் பிறந்து கன்னியில் குருவுள்ள சகட யோகமானாலும் பயிர்த் தொழிலால் சுகமடைவான். ராஜாங்கப் பிரசித்தியுடையவனாவன்.

(305) ஜன்ம நக்ஷத்திரம் திருவாதிரை 3-ம் பாதமாகி மிதுனம் ஜன்ம லக்கினமாகப் பிறந்தால் கல்வியறிவும் உத்தியோக ஜீவனமும் உண்டு. இதற்கே உச்சத்தில் சுக்கிரனிருந்தால் பாட்டால் ஜீவனமும், புதனுக்கிரண்டில் ரிஷபத்தில் ராகு இருந்தால் உத்தியோக நிபுணத்துவமும் ஏற்படும்.

(306) ஜாதகருடைய ஜன்ம நக்ஷத்திரமானது பூரமும், லக்கினம் கும்ப லக்கினமுமானுல் 10-ல் ராகுவும் புதனுடன் 10-மாதி கூடி மேஷத்திலுமிருந்தால் சமர்த்த ஜோதிடத்தாலும் வியாபாரத்தாலும் 20, 25, 30, 40 இந்த வயதுகளில் ஒவ்வொரு நாளும் சுகவிருத்தியும் தனவிருத்தியும் நற்கீர்த்தியுடன் ஜீவனமும் உண்டு. இதில் ராகு தெசையில் ஜோதிடத்தால் பிரபல பிரசித்தியும் வாயு திக்கில் பிரபுக்கள் சினேகமும் சொர்ண வஸ்திர க்ஷேத்திராதி லாபங்களும் சூத்திரப் பிரபுவால் குதிரை முதலிய லாபமும் உண்டாகும்.

(307) சதயம் ஜன்ம நக்ஷத்திரமும் மகரம் லக்கினமுமானுல் தார வமிசத்தினுல் சுகமும் சனி செவ்வாயுடன் கூடி மேஷத்திலிருந்தால் ஜாதகர்களுக்கு புரோகித ஜீவனமும் புத தெசையில் புதன் மேஷத்திலிருந்தால் இரண்டு தேசங்களில் வாசமும் ஸ்தான பிரஷ்டமும் தெசையிற் பாதியில் கிரக க்ஷேத்திராதி லாபமும் தெசை முழுதும் சுகமும் உண்டாகும்.

(308) திருவோணம் ஜன்ம நக்ஷத்திரமும் சிம்ம லக்கினமும் ஆகி, சூரியன் ராகுவுடன் கூடி கடகத்திலிருந்தால் ஜாதகன் துராலேசனையும் கிரைய விக்கிரையமும் செய்வான். 25 வயது முதல் தனமடைந்து ஜனவசியமும் சுயப்பிரபலமும் அடைவான். 30 வயது 40 வயது காலங்களில் சம்பத்துமடைந்து ஜீவனம் உண்டு. இதற்கே சனி ரிஷபத்திலிருந்தால் சனி தெசையில் உத்தரோத்தமமான தனமுண்டாகும்.

(309) ஜென்ம நக்ஷத்திரம் பரணியும் தனுசு லக்கினமும் ஆகிப் பிறந்து, குருவும் செவ்வாயும் சிம்மத்திலிருந்தால் படிப்பிலும் எழுதுவதிலும் சாமர்த்தியமடைவான்.

(310) ஜன்ம நக்ஷத்திரம் கேட்டையும் ரிஷப லக்கினமும் ஆகி, ஐந்தில் சுக்கிரனும் கேதுவுமிருந்தால் மேற்படி கேது தெசையில் நடுவில் பிதுரு மரணமும் மூன்ருந் தெசையில் (சுக்கிரன் தெசையில்) பிற்பாதியில் நல்ல யோகமும் பாக்கிய வமிசத்தில் மனைவியும் உண்டு. மாமனுருக்குப் பிரபல உத்தியோகமும் பிரசித்தியும் உண்டு. ஜாதகனுக்கு ராகு தெசையில் வாகனுதி கீர்த்தி

களும் பிரசித்தியும் 10000-த்திற்கு மேல் தனமும் சுகமு முண்டாகும்.

(311) பூசம் 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி ரிஷபம் ஜன்ம லக்கினமானுல் புரோகிதமும், சாஸ்திர ஞானமில்லாதவனு லும் சம்பாத்திய சாமர்த்தியமும் உண்டாகும்.

(312) சித்திரை 2-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி புதன் கேந்திர ராசியிலிருந்தால் புத தெசையில் புத்திரனுல் சுக முண்டாகும்.

(313) சித்திரை நக்ஷத்திரம் 3, 4-வது பாதம் ஜன்ம நக்ஷத் திரமும் கடக லக்கினமுமானுல் ரிஷப ராசியில் குருவிருந்து சகட யோகமுண்டானுலும், சிம்மத்தில் செவ்வாயும் ராகுவுமிருந்தால் ராகு தெசை பிற்பாதிவரை கஷ்டமும், பிற்பாதியிலிருந்து சுகமும், குரு தெசையில் பிற்பாதி முதல் விசேஷ யோகமும், வியாபாரி யான பிரபுக்களின் சிநேகிதத்தினுல், உயர்ந்த நூல் வியாபாரத்தி னுல் பொருளடைந்து ஜீவனமும் உண்டு. கன்னியில் சனியிருந்தால் அந்த தெசையில் பிரபல யோகமும், புத தெசையில் வெகு தன லாபமுமுண்டாகும்.

(314) உத்திராடம் 1-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் ஜன்ம லக்கினம் கும்பமும் புதன் வீட்டில் செவ்வாயுமிருந்து ஜனித்தால் வியாபாரதினுல் ஜீவனம்.

(315) ஜன்ம நக்ஷத்திரம் உத்திரட்டாதியும் ஜன்ம லக்கி னம் மிதுனமும் ஆகிப் பிறந்து புத, சுக்கிர, சூரியர் கன்னியிலிருந் தால் இருபத்தைந்து வயது முதல் பிரபுப் பிரீதியும் முப்பது வயதுக்கு மேல் பிரபல உத்தியோக சித்தியும் அடைந்து சமுத்திர சமீப தேசத்தில் விசித்திர வீடு முதலானவற்றுடன் ஜீவிப்பான்.

(316) ஜன்ம நக்ஷத்திரம் மூலமும் ஜன்ம லக்கினமும் சிம்ம முமாகின் சுக்கிரன் லக்கினத்தில் இருந்தால் குடும்பியாகி எழுத்து உத்தியோக மூலம் ஜீவனம் உண்டு. தன சம்பாதனையில் நீச்சப் பிரபுவால் 35 வயது முதல் ஜீவனம் செய்வான்.

(317) உத்திராடம் 1-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் மிதுனம் ஜன்ம லக்கினமும் ஆகி, லக்கினத்தில் குருவும் சூரியனும் கூடியிருந்தால் ராஜாங்கத்தில் எழுத்து மூல ஜீவனம் உண்டு. மேற்படி குரு தெசை வந்தால் சுயமத ஸ்தாபகர்களிடம் அன்பும் தேவபக்தியும் வெகு தனமுமடைவான். அன்னதானம் செய்வான்.

(318) கிருத்திகை 2, 3, 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி லக்கினம் சிம்மம் ஆகி, சுக்கிரன் லக்கினத்திலிருந்தால் பாவியத்

தில் 30 வயதுவரை அவதியும், முப்பது வயதிற்குப் பிறகு முத்து வியாபாரத்திஞல் ஜீவனமுண்டாகும். மேலும் ராகு அஷ்டமத்தி லிருந்து (கடக) குருவால் பார்க்கப்பட்டால், ராகு தெசை பிற் பாதியிலிருந்து குரு தெசையின் மூன்றில் முதலொருபாகம் வரை யில் யோக ஜீவனம் உண்டு.

(319) அவிட்டம் 3, 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் கடக லக்கினமுமாஞல், மகர குருவுள்ள சகட யோகமாஞலும் குருவும் செவ்வாயும் கூடின் வெளிதேச ஜல மார்க்க வஸ்து வியா பாரத்திஞல் வெகு தனமடைந்து நல்ல ஜீவனம் செய்வான்.

(320) ஜென்ம நட்சத்திரம் ஹஸ்தமும் ஜென்ம லக்கினம் கன்னியுமாகின், லக்கினத்தில் சுக்கிரனிருந்தால், பிதுர் பாக்கிய மும் கடகத்தில் ராகு இருந்தால் அந்த தெசையில் புத்திரமித்தி ராதி லாபமும் தனலாபமும் தனுசில் குரு இருந்தால் குரு தெசை யில் வெகு கிராம பூமிகளுக்கு அதிகாரமும் வீட்டில் தங்கப் பாத்திரம் முதலிய லக்ஷிமி கடாக்ஷாதிகளுடன் சுக ஜீவனம் உண்டு.

(321) அசுவணி ஜன்ம நக்ஷத்திரமும் கடக லக்கினமும் ஆஞல் சுக்கிரன் 10-லும் செவ்வாய் 8-லும் இருந்தால் குரு கன்னி யிலிருக்கும் சகடயோகமாஞலும் முப்பத்தாறு வயது முதல் பிரபல உத்தியோகத்திஞல் அரசாங்கத்திஞல் மந்திராலோசனை செய்பவஞகி வெகு தனமடைந்து ஜீவனம் செய்வான். ஆயினும் இவன் பாலிய தரித்திர ஜாதகன் ஆவான். ஷை செவ்வாயின் தெசையில் யோக பங்கமும் புத்திர நாசமும் ஏற்படும். இதற்கே தனுசில் ராகு இருந்தால் அந்த ராகு தெசையில் ஸர்வாதிகாரமும் ராஜ முத்திராதிகாரமுமுண்டாகும்.

(322) பூராடம் ஜன்ம நக்ஷத்திரமாகி லக்கினம் கடகம் ஆகி செவ்வாய் நீச்சமடைந்திருந்தால் வெளி தேசத்தில் 25 வய துக்கு மேல் தனலாபமும் தீபாந்திர வஸ்து வியாபாரமும் உண்டு. நீச்சர் அல்லது துருக்கர்களிடம் சேவையால் தனமும் ஜீவனம் அந்த தனத்தாலும் ஏற்படும்.

(323) கேட்டை ஜன்ம நக்ஷத்திரமுமாகிக் கும்பலக்கினமு மாகிப் பிறந்தால் கடகத்தில் கேதுவுடன் கூடிய சுக்கிர தெசையில் முற்பாதியில் படிப்பு உண்டு. சூரியன் சிம்மத்தில் இருந்தால் சூரிய தெசையிற் பாதியில் வெகு சம்பத்துண்டு. ஷை சந்திர தெசையில் கல்வியால் வெகு தனலாபமும் (யாகாதி சித்தியும்) மிதுனச் செவ்வாய் தெசையில் வெகு புகழும் யுக்தியான பிரசங்

கங்களால் தனமும் பிரசித்தியும் உண்டு. ராகு தெசையில் வெகு தனலாபாதிகளுமுண்டாகும் சுகஜீவனமுண்டாகும்.

(324) ஜாதகனுக்கு ஜன்ம நக்ஷத்திரமானது உத்திரம் 2, 3, 4-வது பாதமும் லக்கினம் கடகமுமாக ஆகி சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் வைதீக ஆச்சார மார்க்கத்தில் 30 வயது முதலாக பிரசித்த புரோகித மூலம் ஜீவனமும், ஆமசிரார்த்தம் பிராப்த்தியும் உண்டு. மேற்படி சுக்கிரன் சித்திரை 3-வது பாதத் திலிருந்தாலுமிப்படியே நடக்கும். இதற்கே மேஷத்தில் ராகு இருந்தால் ராகுவின் அந்தர் தெசையில் புரோகிதத்தினுல் வெகு தனம் சேரும். இதற்கே மிதுனத்தில் குருவும், லக்கினத்தில் சனியு மிருந்தால் குரு தெசையில் விசேஷ சுகமும் சனி தெசையில் சம பலனும் உண்டாகும்.

(325) அனுஷம் ஜன்ம நக்ஷத்திரமும் கன்னியாலக்கினமு மாகின் கடகத்திலுள்ள புத தெசையில் பிரபல யோகம் உண்டு. மகரத்தில் செவ்வாயுடன் கூடிய கேது தெசையில் சொர்ணுதி லாபம் உண்டு. கடக சுச்கிர தெசையில் வஸ்திர வியாபாரத்தினுல் வெகு தனலாபமும் பிரபுவின் காரியங்களில் நல்ல புகழுமுண்டா கும். சுகஜீவனமுடையவனுவான்.

(326) மேஷ சந்திரனும் தனுசு லக்கினமுமாகி செவ்வாய் ஒன்பதாமிடத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டால் யஜமான துவேஷமும் குருவால் செவ்வாய் பார்க்கப்பட்டால் ஜன்ம பூமிக்கு கிழக்கில் தானுகவே பெரிய பிரபு ஆவான். வெகு கிராம ஆதிபத்தி யங்களடைவான், சுயார்ஜித ஜீவனமுடையவன். முதலில் நீச்சப் பிரபுவிடம் சேவை செய்து பின் வயதில் மேற்படி யோகத்தை அடைவான்.

(327) மேஷ சந்திரனும் மகர லக்கினமுமானுல் கன்னியா குரு சகட யோகமானுல் 2-ல் செவ்வாயும் லக்கினத்தில் ராகுவும் 5-ல் சனியுமிருந்தால் ராகு தெசையில் பிரபல சுகமும் வெகு வாச் சாலகமும் பயிர்த் தொழிலில் ஜீவனமும் அதனுல் பிரபுவைப் போலும் ஜீவனம் செய்வான்.

(328) கேட்டை ஜன்ம நக்ஷத்திரமும் கடக லக்கினமுமாகி மேஷ குரு சகட யோகமிருப்பினும் 10-மாதி குருவுடன் கூடின் சங்கீத ஜீவனம் உண்டு.

(329) ஹஸ்தம் 1-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் சிம்ம லக்கினமுமாகின் 10-மாதி கேந்திரத்தில் இருந்தாலும் அல்லது

4, 5-மிடங்களில் சுக்கிர செவ்வாய் பரிவர்த்தனையிலிருந்தாலும் ராஜாங்க உத்தியோக ஜீவனம் உண்டு.

(330) மிருகசீரஷம் 1, 2-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி கும்ப லக்கினமுமானல் மிதுன ராகு தெசையில் மத்திம பலனும் கன்னியா குரு தெசையில் கடன் நிவர்த்தியும் சுகமும் தினந்தினம் தர்ம விர்த்தியும், மகர சனி திசையில் பிரபல ராஜயோகமும் அடைந்த சமஸ்த ஸம்பத்துவமுள்ளவனுகி சுக ஜீவியாக ஜீவன முடையவனுவன்.

(331) ஜென்ம நட்சத்திரம் பரணியாகி மேஷ ராசியே ஜன்ம லக்கினமாகிப் பிறந்தால் சுக்கிரன் உச்சத்திலிருந்தால் தகப்பனுக்கு வெகு யோகமுண்டு. கும்ப சூரிய தெசையில் வெகு பாக்கியமும், சந்திர தெசையில் வெகு திரவிய மழிவும் ஜாதகனுக்கு உண்டு, மகரத்திலுள்ள செவ்வாய் தெசையின் கால முழுதும் ராஜ யோகமும், ரிஷப ராகு தெசையில சுயபுக்தி தவிர மற்ற புக்திகளில் பிரபல யோக விருத்தியுமுண்டாகி ஜீவனம் செய்வான்.

(332) மகரச் சந்திரனும் விருச்சிக லக்கினமுமானல் மணி ரத்னுதி பரீக்ஷையும் ராஜ துவாரா வெகு மானுதிகளாலும் பிரபல ஜீவனம் உண்டு.

(333) ஜன்ம நக்ஷத்திரம் உத்தராடம் 2-வது பாதமும் சிம்ம லக்கினமுமாகி லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் சனி யிருந்தால் பாலியத்திரமும் பற்பல தேசந்திரிதலும் பிரபல உத்தியோகமும் உண்டு. 25 வயது முதல் கடகத்திலுள்ள ராகு தெசையில் குரு புக்தி முதல் அரசாங்க உத்தியோகமும் மிலேச்ச ராஜாங்கப் பிரசித்தியும் உண்டு. முப்பது முப்பத்தைந்து இந்த வயதுகளில் தேசாந்தர சுகமும் உண்டு.

(334) மூல நக்ஷத்திரம் ஜென்ம நக்ஷத்திரமாகவும் மிதுன லக்கினமாகவும் ஜனித்தவனுக்கு, குருவும் :சந்திரனும் கூடி 7-ல் இருந்தால் ராஜ ஸ்திரீ சேர்க்கையும், பிரபல உத்தியோகமும் உண்டு. மீனத்தில் புதனுடன் கூடிய சூரிய தெசையில் அதிக செலவும் சம பலனும் ௸ சந்திர திசையில் வீடு முதலிய சகல பாக்கியமும் உண்டு.

(335) மூலம் ஜன்ம நக்ஷத்திரமும் கும்ப லக்கினமுமாகி 2-மாதியும் 11-மாதியும் 11-ல் இருந்தால் வியாபாரத்தினுல் வெகு திரவியம் சம்பாதித்து ஜீவனம் நடக்கும்.

(336) ஜன்ம நக்ஷத்திரம் உத்திராடம் 1-வது பாதமும் ஜெனனம் ரிஷப லக்கினமுமானுல் கடக குரு சகட யோகமானுலும்

ஜன்மம் முதல் பாக்கியமுள்ளவன். இதற்கு விருச்சிகத்திலிருக்கும் ராகு தெசையில் பிரபலமாக யோகாரம்பமும் உண்டு. ஷை குரு செவ்வாயால் பார்க்கப்பட்டால் குரு தெசையில் லக்ஷத்திற்கு மேற்பட்ட தனமுண்டு, வெகுவாகன சம்பத்துடன் வெகு க்ஷேத்திராதிபதியாகி சுகஜீவனமுடையவனுமாவான்.

(337) பூராடம் ஜன்ம நக்ஷத்திரமும் சிம்ம லக்கினமுமாகி ஜனித்தவனுக்குச் சுக்கிரன் பலிஷ்டனாக 5-ல் இருந்தால் பிரபல ராஜ யோகமுண்டாகும். சுயக்ஷேத்திரத்தில் லக்கினாதிபதியுடன் கூடிய செவ்வாய் தெசையில் பிரபல உத்தியோக ஜீவனமும் துலா ராகு தெசையில் புத்திரீ புத்திர லாபமும் வெகு யோகமும், புதன் பஞ்சமத்தில் இருந்தால் ஜாதகனுடைய மூத்தவனுக்கு மிவ்வித போகமும் புண்ணிய க்ஷேத்திர வாசமும், பொக்கிஷாதிகாரமும் சந்திரனுக்கிரண்டாமிடத்திலுள்ள குரு திசையில் வெகு யோகமும் வியாபார சித்தியும், வீட்டில் லக்ஷிமீ கடாக்ஷமும் சுகஜீவனமும் உண்டாகும்.

(338) திருவாதிரை ஜன்ம நக்ஷத்திரமும் லக்கினம் கும்பமுமானால் கும்பத்தில் குருவும் ராகுவும் கூடின் ராகு தெசையில் 7 அல்லது ஏழரை வருஷம் வெகு கிலேசமும் ராகுவுடன் கூடிய குரு தெசையில் முதலில் கஷ்டமும் 6 வருஷம் கஷ்டமும் மூத்த சகோதரனுக்குக் குருவின் தெசையில் பிற்பாதியில் பிரசித்தியும் உண்டு. தனுசு ராசியில் சனி இருந்தால் சனி தெசையில் பாக்கிய விருத்தியும் தன வரவும் விசேஷ முண்டாகி ஜீவனம் நடக்கும்.

(339) கிருத்திகை 2, 3, 4-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் கும்ப லக்கினம் ஜனனமாகவுமாகி ஷை சந்திரனால் சனி பார்க்கப்பட்டால் பயிர், பசு முதலிய விருத்தியும் ராஜாங்கப் பிரசித்தியும் உண்டு. க்ஷேத்திர கிராமமுடையவனாகவும் 20, 25, 30, 35, 40 இந்த வயதுகளில் விசேஷ யோகமுமுண்டாகி சுகஜீவனம் நடக்கும்.

(340) அசுவ்ணி ஜன்ம நக்ஷத்திரமும் தனுசு லக்கினமுமாகி சந்திரனும் செவ்வாயும் மேஷத்தில் புதனுடன் கூடி இருந்தால் 27 வயதிற்குப் பிறகு தனமும் ராஜாங்கத்தில் உத்தியோகமும் முப்பது வயது முதல் பிரபல உத்தியோக ஜீவனமும் 40 வயது முதல் உத்தரோத்தரமாக பிரபலமடைவான். இதற்கே பாக்கிய பாவாதிபதியாகிய சூரியன் ரிஷபத்திலிருந்தால் ஷை சூரிய தெசையில் பிரபல உத்தியோகமும் ஷை சந்திர தெசையில் முற்பாதியில் அஷ்டமாதிபத்தியத்தினால் கஷ்டமும் விரையமும் பஞ்சமஸ்தான

செவ்வாய் தெசையில் மகாபாக்கியமும், தெசையின் கடைசியில் விரையமற்பமும் உண்டு. சிம்ம ராகு தெசையில் குரு புக்தி முதல் விசேஷ சுகமும் யோகமும், லக்கின குரு தெசையில் முற்பாதி வரை யோகமும் புத்திரனுக்குப் பிரசித்தியும் தர்மசித்தியும் புகழும் உண்டாகும்.

(341) மூலம் ஜன்ம நக்ஷத்திரமும், சந்திரனிருக்கும் தனுசு ராசியே ஜன்ம நக்ஷத்திரமுமாகின் வெளி தேச வஸ்து வியாபாரத்தினல் தினம் தினம் யோகமாக தனமடைந்து தன் தகப்பனைவிட மேன்மையான யோக ஜீவனம்.

(342) ஜன்ம நக்ஷத்திரம் உத்திரட்டாதியாகி லக்கினம் துலாமாகி புதனும் சூரியனும் கன்னியில் இருந்தால் சூரிய தெசையில் ராஜாங்கத்தில் பிரபல உத்தியோக ஜீவனம் உண்டு. சுக்கிரன் 11-மிடத்திலிருந்தால் சுக்கிர தெசையில் 20000 சம்பாத்தியமும் ராஜ முத்திராதிகாரமும் உண்டாகி வெகு பிரபல முண்டாகும்.

(343) உத்திராடம் 1-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் ஜெனனம் மகர லக்கினமும் ஆகின், பஞ்சமாதிபதி சுயக்ஷேத்திரத்திலிருப்பிலும் குரு மீனத்திலிருப்பினும் பிரபல ராஜ்யாதிகாரமடைவான்.

(344) உத்திரம் 2, 3, 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் தனுசு லக்கினமும் ஆகி, துலாத்தில் குரு இருக்கும் சகட யோகமாக ஜனனமானல் முதலில் வியாபாரம் செய்து சிற்றப்பனல் தன நஷ்டமும் உண்டு. கன்னியில் ராகு இருந்தால் இந்த ராகு தெசையில் 25 வயதுக்குப் பிறகு சிற்றப்பன் புத்திரனுலும் தன்னுலும் பிரபல வியாபார பிரசித்தியும் ஜாதகன் அடைந்து அவன் பின் சகோதரன் உத்தியோகப் பிரசித்தியும் அடைந்து இருவரும் சுக ஜீவனமுடையவர்களாவார்கள்.

(345) ஜன்ம நக்ஷத்திரம் கிருத்திகை 2. 3, 4-வது பாதமும் ஜன்ம லக்கினம் சிம்மமுமாகின் செவ்வாய் தெசையில் சுதந்திரமில்லாத ஜீவனமுண்டு. ராகு ரிஷபத்திலிருந்தால் ராகு தெசையில் பிற்பாதியிலிருந்து சுதந்திர ஜீவனமும் உண்டு. வியாபாரத்தினல் பிரபல தனலாபமுண்டு. இரண்டாமிடத்தில் குரு இருந்தால் குரு தெசையில் விசேஷ தனலாபமுமுண்டாகும்.

(346) ஜென்ம நக்ஷத்திரம் பூரட்டாதி 4-வது பாகமும் மீனமே ஜன்ம லக்கினமுமானல் 10-மாதி மித்திர ராசியில் இருந்தால் வியாபாரத்தில் சொர்ணம் ரத்தினம் முதலிய பரீக்ஷையில் சமர்த்தனகி ஜீவிப்பான். இதில் மேஷ குரு சகட யோகமானலும்

2, 11 மாதிகள் 11-ல் கூடினால் சொர்ண ரத்தினதிலாபமும் லக்ஷம் வராகன் ஆஸ்தியும் உண்டு. ரிஷப கேது தெசையில் மேற்படி யோகமும் உண்டாகும்.

(347) உத்திராடம் 2, 3, 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் கும்ப லக்கினமும் ஆகி 10-ல் குருவிருந்தால் நியாய வழியில் சம்பாதித்து ஜீவனம் செய்வான். இதற்கே ராகு சிம்ம ராசியிலிருந்தால் சந்திராஷ்டம ராகு தெசையானாலும் மேற்படி ராகு தெசையினால் வெகு பிரசித்தியும் லக்ஷ தன ஆஸ்தியும் குரு தெசையில் குபேர சமதனமும் அடைவான்.

(348) மூலம் ஜன்ம நக்ஷத்திரமும் ஜன்ம லக்கினம் மீனமும் ஆகி, சூரியன் 10-மிடத்தில் சனி புத கிரகங்களுடன் கூடியிருந்தால் விவாகமான பின்பு முப்பத்திரண்டு அல்லது 33 வயதிற்குப் பிறகு அம்மானால் வியாபாரத்தில் விசேஷ சகாயமும் வெகு பாக்கியமும் உண்டு. குருவுடன் கூடிய கும்ப ராகு தெசையில் வெகு பாக்கியமுமடைவான்.

(348) ஜென்ம நக்ஷத்திரம் பூரமும், கும்ப லக்கினமும் ஆகி, சனியும் செவ்வாயும் மிதுனத்தில் ரவி புதருடன் கூடியுமிருந்தால் சூத்திரப் பிரபுவால் உத்தியோகம் வியாபார மிரண்டும் செய்து ஜீவிப்பான். நல்ல ஞானமும் மனச் சஞ்சலமும் உடையவன். நான்காந் திசையில் முற்பாதியில் பிதுரு கஷ்டம். மனைவி கஷ்டம் முதலியனவும் பிற்பாதியில் வெகு பிரபலமும் உண்டு.

(349) கடக சந்திரனும் ஜெனனம் மீன லக்கினமுமாகின் ராஜாங்க உத்தியோகத்தினால் ஜீவனமும் நான்காந் தெசையில் வெகு கிராமாதிகாரமும், பாக்கியமும் 2000 தன சம்பாதித்தியமும் உண்டாகும்.

(350) ஜென்ம லக்கினம் துலாமும் ஜன்ம நக்ஷத்திரம் உத்திரம் 2, 3, 4-வது பாதமும் ஜனனமாகி, நான்கில் இராகு இருந்தால் நான்காந் தெசையாகிய லக்கின ராகு தெசையில் வியாபாரத்தால் மூன்று லக்ஷத்திற்கு ஜாதகன் அதிகாரியாகி நிரந்தரமான அன்னதானாதி தர்ம சத்திரம் தோட்டம் முதலியன கட்டி வெகுஜன ரக்ஷகனாவான். மேஷ குரு சகட யோக தெசையிலும் யாத்திராதிகள் செய்து வியாபாரப் பெருக்குடையவனாகி தாயாதி கலஹத்தினால் தனவிரயமுமடைந்து பிறகு பிரபல ஜீவனமுண்டாகும்.

(351) அவிட்டம் 3, 4-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி மீனம் ஜன்ம லக்கினமும் ஆகி 11-ல் சனி சுக்கிரரிருப்பின் வெகு வியாபாரத்தினால் 10000 பொன் சேர்ப்பான்.

(351) திருவாதிரையில் சந்திரனிருந்து ஜெனனம் மகர லக்கினமுமாகி, லக்கினத்தில் சுக்கிரனிருந்தால் ரத்தினம் சொர்ணமிவை விற்று ஜீவிப்பான். சனி 12-ல் இருந்தாலும் லக்கினுதி தெசையானுல் பிற்பாதி தெசையில் உத்தரோத்தரமான பிரபலத்தையடைவார். இதற்கே தர்ம கர்மாதிபதிகள் கூடியிருக்கும் பக்ஷத்தில் பாக்கியாதிபதி தெசையில் வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷமானது புத்திரனுடைய அதிஷ்டத்திஞல் பெருகும்.

(353) ரிஷபச் சந்திரனும் தனுசு லக்கினமுமாகின் மிதுனத்தில் குருவுள்ள சகட யோகமானுலும் 20 வயதுக்குமேல் ராஜாங்க உத்தியோகத்திஞல் சுகமும் 25, 27, 30 வயதுக்கு மேல் உத்தியோகப் பிரபலமும் 50-ல் மிதமான சுகமுமுண்டாகும்.

(354) திருவாதிரை ஜன்ம நக்ஷத்திரமும் கும்ப லக்கினமும் ஆகி சிம்மத்தில் செவ்வாயிருந்து 5-ல் இருந்து சனி பார்த்தால் பயிர்த்தொழிலில் ஜீவனம்.

(375) அசுவணி 3-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் விருச்சிக லக்னமுமாகி ஜனித்தால் 1, 9-மாதிபதிகள் கூடின் ரத்தினம் சொர்ணமிவற்றை விற்றுத் தகப்பன் ஜீவிப்பான். ஜாதகன் ராஜா ஸ்தானத்தில் சொர்ண பரீக்ஷை செய்பவனுகவும் ஷராப்பாகவும் இருந்து வெகு யோக ஜீவனம் செய்வான்.

(356) மகம் ஜன்ம நக்ஷத்திரமும் மீன லக்கினமுமாகப் பிறந்து, மீன குரு சகட யோக முண்டானுலும் 10-ல் உள்ள சூரிய தெசையில் சூரியன் புதனுடன் கூடின் சம பலனும் தேசாந்தர சஞ்சாரமும் உண்டு. சந்திர தெசையில் சகோதரனுலும், கஷ்டத்திஞலும் பாக்கியமுண்டாகும். மேற்படி சந்திரனைச் சனியும் செவ்வாயும் 10, 7-ம் பார்வையாக அல்லது எந்தப் பார்வையாகவாவது பார்த்தாலும் சந்திர தெசை குரு புக்தி முதல் க்ஷேமத்தை யடைவான். ஷெ சந்திர தெசைக்குப் பிறகு செவ்வாய் தெசையில் வெகு யோகமுண்டாகும். ராகு தெசையில் ராகு அஷ்டமத்திலிருந்தால் அத்தெசை யோகபங்கம் உண்டாகும். 3000 தனம் சம்பாதனை யுண்டாகும்.

(357) ஜென்ம லக்கினம் துலாமும் ஜன்ம நக்ஷத்திரம் புனர்பூசம் 1, 2, 3-வது பாகமும், ரிஷப குரு சகடயோகமானுலும் சந்திரன், சனி, செவ்வா யிவர்களால் பார்க்கப்பட்டால் பயிர், உத்தியோக மிரண்டு விதமும் ஜீவனம் உண்டு.

(358) ஜென்ம நக்ஷத்திரம் மிருகசீரிஷம் 3, 4-வது பாதமும் லக்கினம் கும்பமாகி 1-மாதி 10-லும் 10-மாதி 9-லும், 10மாதி

8-ல் 2-மாதியுடனும் இருந்தால் குரு தெசை முழுதும் பிரபல உத்தியோகமும், குரு தெசை சுக்கிர புக்தியில் பத்னி நாசமும் உடனேயே 2-ந்தார விவாகமும் சனிதெசை முழுவதும் வெகு யோகமும் 10000-த்திற்குமேல் சம்பாதனையும், தானதர்மாதிகளும் செய்து சுகஜீவனம் செய்வான்.

(359) உத்திராடம் 2, 3, 4-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமும், ஜன்ம லக்கினம் மீனமுமானால் குரு தனுசில் இருந்து சிம்மம் ராகுவைப் பார்த்தால் ராகு தெசையில் பிரபலமும் குரு தெசையில் சொர்ண ரத்தின லாபமும் 1000-த்துக்கு மேல் மாத சம்பாதனையும் ஏற்பட்டு ஜீவனம் செய்வான்.

(360) திருவாதிரை ஜன்ம நக்ஷத்திரமும் ஜென்ம லக்கினம் கும்பமும் ஆகி 2, 10-மாதிகள் பார்த்துக்கொண்டு உச்சத்திலிருந்தால் உத்தியோக ஜீவனம் உண்டு. இதற்கே 10-மாதியுடன் கேது கூடியிருந்தால் கேது தெசையில் சித்த புருஷ சேர்க்கையால் தாதுர்வாதம் முதலியன செய்து ஜீவிப்பான் உயர்ந்த தர்மங்களைச் செய்வான்.

(361) கிருத்திகை 2, 3, 4-வது பாகம் ஜன்ம நக்ஷத்திரமும் விருச்சிக லக்கினமுமாகி மேஷத்தில் குருவிருந்து 10-மாதி அஷ்டமத்தில் ராகுவுடன் கூடின் நீச்சராஜாங்க உத்தியோகமும் வியாபார சித்தியும் உண்டாகி பிரபல ஜீவனம் உண்டு.

(362) திருவோணம் ஜன்ம நக்ஷத்திரமும் ஜன்ம லக்கினம் மகரமும் ஆகி குரு சிம்மத்திலிருந்து சகடயோக மேற்படினும் புத சுக்கிர சுயக்ஷேத்திரங்களிருந்தால் அம்மான் பெண்ணை மணந்து அம்மானால் பாக்கியமும் அடைவான். பயிர்த்தொழிலும் 25, 30, 35, 40, 50 வயது இக்காலங்களில் தினந் தினம் விருத்தியாகி பிரபல ஜீவனம் செய்வான்.

(363) ஜென்ம நக்ஷத்திரம் உத்திரட்டாதியாகி ஜெனனம் விருச்சிகலக்கினமுமாகின் 1-10-க்குடையவருடன் சுக்கிரனும் கூடி 10-ல் இருந்தால், தினந்தோறும் வியாபாரத்தில் விருத்தியும் உண்டு. சொர்ணரத்தினபரீக்ஷையும், தான்னிய வியாபாரமும் செய்து ஜீவனம் செய்வான்.

(364) ஜன்ம நக்ஷத்திரம் ரேவதியாகி ஜெனனம் கன்னியா லக்கினமுமாகின் 10 மாதி 5-லும், 5 மாதி 10-லும் இருந்தால் சொர்ண ரத்தினாதி பரீக்ஷ வியாபாரத்தால் எப்போதும் தனம் வரும். பற்பல வியாபாரத்தாலும் லாபம் உண்டு. விதேச வஸ்து

வியாபாரம் உண்டு. இதற்கே சந்திரதெசை வந்தால் அதில் வெகு யோகம் உண்டாகும்.

(365) ஜென்ம நக்ஷத்திரம் பூசமும் மகரலக்கினமுமாகி சிம்ம குரு சகடயோகமாகினும் 10 மாதி செவ்வாயுடன் கூடின் க்ஷேத்திரம், கிராமம் இவைகளாலும், பிரபுவாலும் ஜீவனம் உண்டு. இதற்கே கன்னியிலுள்ள புத தெசை வந்தால் வெகு சம்பத்துமுண்டாகும்.

(366) ஜென்ம நக்ஷத்திரம் சித்திரை 2-ம் பாதமும் ஆகி லக்கினுதிபதி ராகுவுடன் கூடி 3-ல் இருந்து, மீன குரு, மேஷ செவ்வாயிவர்களாலும் பார்க்கப்பட்டால் ராஜாங்கத்தில் அரசனுக்குப் பிரியனுக ஆயுதத்தைத் தரித்துப் பெரிய சேனுதிபதி உத்தியோகத்தில் ஜீவனம் உண்டு. இதற்கே சனி புதனிவர்கள் கூடி 4-ல் இருந்தால் சனி தெசையில் தினந் தினம் பாக்கியவிருத்தியுண்டாகும்.

(367) திருவாதிரை ஜன்ம நக்ஷத்திரமும் மகரம் ஜன்ம லக்கினமுமாகி 10 மாதி சந்திரனுடனிருந்து 3, 10-ல் உள்ள குரு செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டால் வெளி தேசத்தில் 25, 27 வயது முதல் உத்தியோக லாபமும் 28-ல் வீட்டில் லக்ஷ்மிகடாக்ஷமும், விவாஹமும், 36, 37-ல் விசேஷ பூமி, திரவியலாபமும், 40, 50-ல் வெகு சுகமும் உண்டு, ஆயுள்வரை சுகமும் உண்டாகி சுக ஜீவனம் செய்வான்.

(368) ஜென்ம நக்ஷத்திரம் கிருத்திகை 12-வது பாதமும் சிம்மம் ஜன்ம லக்கினமாகவும் ஜனித்து 4-க்குடையவன் 4-ல் இருந்தால் சொர்ண ரத்தினுதி கிரைய விக்கிரையத்தினுல் ஜீவனம் செய்வான். இதற்கு புதனும் சூரியனும் கும்பத்திலிருந்தால் பாலியம் முதல் சுகமும் வியாபாரத்தில் சுயார்ஜிதமும் பெருகும். இதற்கே 10-மாதி உச்சத்தில் இருந்தாலும் மேற்படி தொழிலே ஜீவன மார்க்கமாகும்.

(369) 10-மாதிபதி உச்சனுகில் பெரும்பாலும் வியாபாரமே ஜீவனம் ஆகும். பூமிமூலமும் பலனுண்டாகும்.

(370) பூசம் ஜன்ம நக்ஷத்திரமும், ஜனனம் தனுசு லக்கினமுமானுல் 9, 10-க்குடையவர்கள் 7-ல் கூடியிருந்தால் சொர்ணரத்னுதிவிக்கிரைய ஜீவனம் உண்டு. இதற்கே குருசுக்கிரர் 5-ல் இருந்தாலும் மேற்படி வியாபார ஜீவனம் நடக்கும். வியாபாரம் வெள்ளை ரத்தின வியாபாரமாகும். 3-ல் உள்ள கேது தெசை

பிரபலமாகும், தேவதரிசனைப் பலன் உண்டாகும். இதற்கே சந்திர தெசை நஷ்டமுண்டுபண்ணும்.

(371) ரேவதி ஜன்ம நக்ஷத்திரமும் கன்னியா லக்கினமுமாகிப் பிறந்தால் லக்கினத்தில் நீச்ச சுக்கிரனும் உச்ச புதனுமிருந்தாலும் 7-ல் குரு இருந்தாலும் மாமனரால் விவாகமானபின்பு உத்தியோகமடைந்து ஜீவனம் உண்டு. குருவுடன் கூடிய மேற்படி சந்திரதெசையில் வெகு யோகமுண்டாகும்.

(372) ஜென்ம லக்கினம் சிம்மமும், ஜன்ம நக்ஷத்திரம் அஸ்வணி நக்ஷத்திரமாகி ஜனித்து, குரு சந்திரர் ஒன்பதில் இருந்தால் பிதுரார்ஜிதத்தினல் க்ஷேத்திர சுகமும், 25, 30-வயது முதல் ஹாஸ்ய கதைகள் செய்தும், ஆகம புராணங்கள் இதிகாசாதிகளில், சைவ புராணங்களில் கதை சொல்வதாலும், க்ஷேத்திர கிராம விசாரணையாலும் ஜீவனம் செய்வான்.

(373) பூசம் ஜன்ம நக்ஷத்திரமும், ஜன்ம லக்கினம் கடகமும் ஆகப் பிறந்தால், லக்கினத்தில் குரு இருந்தால் யுக்தியாய்ப் பிரசங்கம் செய்து ஜீவனம் செய்வான். இதற்கே 10-மாதி 5-ல் இருந்தால் 25 வயது முதல் வெகு கிராமாதிகாரமடைந்தும், தேவ க்ஷேத்திர விசாரணைக் கர்த்தா அல்லது அதிகாரியாகவும் இருப்பான். இதற்கே 5-மாதியுடன் சூரியன் கூடியிருந்தால் 35 வயது முதல் ராஜ முத்திராதிகாரமும் உண்டாகும்.

(374) பூரட்டாதி 3, 4-வது பாதம் ஜன்மநக்ஷத்திரமும், கும்பலக்கினமாகி ஜனித்து லக்கினதிபதி 1-ல் இருந்து 9-மாதி 2-ல் 5-மாதியுடன் கூடி இருந்தால், சகோதரியின் கணவனல் முதலில் சுகமும் பிற்காலத்தில் 22 வயதுக்கு மேலும் 35 வயது முதலும் ராஜாங்கத்தில் ஒரு கிராமாதிகாரமடைந்து ஜீவனம் செய்வான்.

(375) சதையம் ஜன்ம நக்ஷத்திரமும், மிதுனம் ஜெனன லக்கினமுமாகி மகரத்தில் இருந்து, 1-ல் புதனிருந்தால், எழுதுவதில் சமர்த்தனகி உத்தியோக ஜீவனம் செய்வான். இதற்கே 2-ல் ராகுவிருந்தால் பிரசங்கியாயும், 30 வயது முதல் விசேஷ பாக்கிமுமடைந்து ஜீவனம் செய்வான்.

(376) சதையம் ஜென்ம நட்சத்திரமும், சிம்மம் ஜென்ம லக்கினமுமாகி, ராகு 5-ல் இருந்தால் ஜன்ம தெசையில் பிதுர் சுகமும் உண்டு. குரு கடகத்திலிருந்தால் அந்த குரு தெசையில் வெகு கஷ்டமும், ஷ குரு சத்துரு அம்சத்திலிருந்தால் அடிக்கடி சொற்ப சொற்ப தனமடைந்து கஷ்ட ஜீவனமும் உண்டு. தெசை

முடிவில் மந்திர சாஸ்திரமடைவான். கும்பத்தில் சனியிருந்தால் சனிதெசையில் சுயபுத்தி யத்தினமின்றி விவாகமும், சிலர் மதப்படி சுயபுத்தி தடைப்பட்டுப் பிறகு விவாகமும் நடந்து, பிறகு பிரபு வின் தயவால் விசேஷ யோகமும் உண்டு. புதன் தெசையில் வித்தியாகோஷ்டியில் தன சம்பாதனையும் உண்டாகி சுக ஜீவன மாகும்.

(377) அஸ்வணி ஜன்ம நக்ஷத்திரமும், ஜெனனம் விருச்சிக லக்கினமுமாகி, கும்பத்தில் குரு சுக்கிர, புத, ராகு, கூடில் உப்பு பயிரிட்டு வியாபாரம் செய்தும், சூத்திர சினேகத்தாலும் ஜீவனம் உண்டு. சனியாலிவர்கள் பார்க்கப்பட்டால் பற்பல வியாபாரத் தாலும் 25 வயது முதல் மேற்படி வழியாலும் பிரபல ஜீவனம் உண்டு. இதற்கே மேற்படி ராகு தெசையில் கப்பல் வியாபாரத் தாலும் தன் புத்திரனாலும் தனமுண்டாகும்.

(378) ஜன்ம லக்கினம் மீனமும், ஜன்ம நக்ஷத்ரம் உத்திரட் டாதி 3-வது பாதமுமாகி ஜனித்தால், பிதா மகனால் ஜீவனமும் 25 வயது முதல் உத்தியோக ஜீவனமும் அதில் 30 வயதுமுதல் விசேஷமும் உண்டாகும்.

(379) மேஷம் ஜன்ம லக்கினமும், துலா சந்திரனுமாகிச் சந்திரன் சுவாதி 1-ம் பாதமுமாகின் உத்தியோக ஜீவனம் உண்டு.

(380) அனுஷ நக்ஷத்திரம் ஜன்ம நக்ஷத்திரமுமாகி, ஜென னம் கடகலக்கினமுமாகிச் செவ்வாயும், சனியும் 6-ல் இருந்தால் தீபாந்தர வஸ்துக்களைக் கிரையவிக்கிரையம் செய்து ஜீவனம் செய்வான்.

(381) ஜன்ம நக்ஷத்திரம் மகம் ஆகி, கடக லக்கினம் ஜன்ம லக்கினமுமாகி புதனும் செவ்வாயும் 3-ல் இருந்தால் வியாபார முண்டு. இதற்கே குரு லக்கினத்திலிருந்தால் 25 வயது முதல் சொர்ண வியாபாரமும் உண்டு. 27-ல் பற்பல பிரபு சினேகமும் நீச்சப் பிரபுவால் 30 வயதுக்குமேல் தனஸ்தானாதிகாரமுமடைந்து, யோகப் பிரபலமாக ஜீவனம் நடக்கும்.

(382) மகம் ஜன்ம நக்ஷத்திரமும், விருச்சிக லக்கினம் ஜன்ம லக்கினமும் ஆகி சூரியனுடன் சந்திரன் கூடி சிம்மத்திலிருந்தால் தனத்தைக் கொடுக்கல் வாங்கல் செய்து ஜீவனம் உண்டு. இதில் சூரியதெசையிலும் சந்திர தெசையிலும் விசேஷ யோகமும் உண்டு. குருவும் செவ்வாயும் முறையே உச்சனும் நீச்சனுமாகி ஒன்றுகூடி 9-ல் இருக்கும் செவ்வாய் தெசையில் பிரபலம் உண்டு. ஷெ சந்திரனுக்குப் பன்னிரண்டிலிருக்கும் கடக ராகு தெசையில்

பற்பல வியாபார மூலம் மாதம் 2000-த்துக்கு மேல் தன சம்பாத்தியமும், புத்திர பலமும் உண்டாகி சுகஜீவனமுண்டாகும்.

(383) ரோகிணி ஜன்ம நக்ஷத்திரமும், கன்னியா லக்கினமுமாகி சுக்கிரன் லக்கினத்தில் இருந்தால் ராஜாங்க பிரபல உத்தியோக ஜீவனம் உண்டு.

(384) அஸ்வனி ஜன்ம நக்ஷத்திரமும், ஜெனனம் சிம்ம லக்கினமுமாகி 4-ல் சுக்கிரனுமிருந்தால் ராஜாங்கத்தில் ஆந்திர பாஷா கவித்துவத்தினாலும், சங்கீதத்தினாலும் ஜீவனம் உண்டு. இதற்கே சூரியன் 2-ல் புதனுடன் கூடியிருந்தால் சூரியதெசையில் வெகு யோகமும் உண்டு. இதற்கே செவ்வாய் ராகு அல்லது கேதுவுடன் கூடி உச்சத்திலிருந்தால் சமுத்திர சமீபத்தில் செவ்வாய் தெசையில் ராஜ சினேக முடையவனாக வெளி தேசத்தில் விசேஷ யோக முடையவனுவன். ராகு தெசையும் யோகமாகவே நடக்கும்.

(385) ஜென்ம நக்ஷத்திரம் பூரட்டாதி 1, 2, 3-வது பாதமும், விருச்சி லக்கினமும் ஜன்மமாக ஜனித்தால் 7-ல் செவ்வாயிருந்தால் ராஜாங்கத்தில் ஸி. ஐ. டி. அல்லது ஒற்றர் வேலையில் பிரசித்தனாகி கடின தண்டலையிடுவனாக ஜீவனம் செய்வான். பிறரை ஹிம்சிப்பான். இதற்கே கேது சிம்மத்தில் இருந்தால் 9, 10, 1-க்குடையவர்களால் பார்க்கப்பட்டால் அந்த கேது தெசையில் வெகு பாக்கியமும் 10,000-த்துக்கு மேலும் சம்பாதிப்பான். ராஜாங்கத்தில் ஸர்வ சுதந்திரமுடையவனுவான்.

(386) ஹஸ்தம் ஜன்ம நக்ஷத்திரமும், ஜெனனம் கும்ப லக்கினமுமாக ஜனித்து 10-ல் செவ்வாயும் 12-ல் சுக்கிரனுமிருந்தால் வியாபார ஜீவனமும், க்ஷேத்திர கிராம விசாரணையும் ராஜாங்கப் பிரசித்தியுமுடையவனாகி சுக ஜீவனம் செய்வான்.

(387) சித்திரை 1, 2-ம் பாதம் ஜன்ம நக்ஷத்திரமும், ஜெனனம் கும்ப லக்கினமுமாகப் பிறந்து 10-ல் குருவிருந்தாலும் 3-ல் சுக்கிர சனி கூடினாலும் புரோகிதமூலம் ஜீவனம் உண்டு.

(388) புனர்பூசம் 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும், கும்ப லக்கினமுமாகப் பிறந்தால் 10-மாதி சூரியனுடன் கூடி 3-ல் இருந்தால் வியாபாரத்தில் பிரபல ஜீவனமுண்டாகும் இதற்கே சுக்கிரன் ராகுவுடன் கூடி 5-ல் இருந்தால் சுக்கிரதெசையில் பிரபல வியாபாரமும், வெகு தன லாபமும் உண்டு. சுகமாக ஜீவனம் செய்வான்.

(389) ரோகிணி 1-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும், மகர லக்கினமுமாகப் பிறந்தால் சொர்ண வியாபாரத்தினுலும், மணிரத்னுதிபரீக்ஷைகளாலும் வெகு யோகமாக ஜீவனம் நடக்கும்.

(388) மகம் ஜன்ம நக்ஷத்திரமும் ஜனனம் தனுசு லக்கினமுமாகி 9, 10-மாதிகள் 10-லும் 1-மாதி 2-லுமிருந்தால் சொர்ண வியாபாரத்தினுல் 25 வயது முதல் பிரபலமடைந்து வெகுயோகமாக ஜீவனம் நடக்கும். இதற்கே 5 மாதியுடன் ராகு 12-ல் கூடின் ராகு தெசை வெகு யோகமாக நடக்கும்.

(389) ஜென்ம நட்சத்திரம் மகம் ஆகி ஜென்ம லக்கினம் கும்ப லக்கின்முமாகிப் பிறந்து 10-ல் செவ்வாய் ராகு, குரு, சுக்கிரனிவர்களிருந்தால் மந்திர சாஸ்திர நிபுணனுகி புரோகித மூலம் ஜீவனமுடையவன். இதற்கே ஷ்டி ராகு தெசை வரும்போது அந்த தெசை முதல் பிரபல யோக முண்டாகும்.

(390) ஜன்ம லக்கினம் மிதுனமும் ஜன்ம நக்ஷத்திரம் பூசமுமாகி ஜனித்தால் 1, 10, 3, 2-மாதிகள் 2-ல் இருந்தால் வியாபாரத்தினுல் சமுத்திர சமீப பட்டிணத்தில் 20 வயது முதல் வியாபார ஜீவனம் உண்டு. 25, 30 வயதுகளில் 10000-த்துக்கு மேற்பட்ட தன லாப வியாபாரமடைந்து தினம் ஒன்றுக்கு 1000 அல்லது 500 அல்லது 400-க்குக் குறையாமல் வியாபாரம் செய்து லக்ஷமல்லது $1\frac{1}{2}$ லக்ஷம் தனம் அடைந்து சுகஜீவனமுண்டாகும்.

(391) சதையம் ஜன்ம நக்ஷத்திரமும் விருச்சிக லக்கினமுமாகி 2-ல் குரு, புத, சுக்கிர, சூரியரிருப்பின் உத்தியோகத்தாலும் வியாபாரத்தாலும் பிரபல தனுட்டியனுகி ஜீவனம் நடக்கும், இதற்கே கேது சந்திரனுடன் கூடியிருந்தால் கேது தெசையில் விசேஷ பாக்கியம் சம்பாதித்து ஆயுள்வரையில் சுகியாயும் பாக்கியவானுமாவான்.

(392) மூலம் ஜன்ம நக்ஷத்திரமும் மிதுன லக்கினமுமாகப் பிறந்து 1, 5, 3, 10-க்குடையவர்கள் 1-ல் இருந்தால் ராஜாங்கத்தில் பிரதான மந்திரியாகி ஜீவிப்பான், மேற்படி சூரிய தெசையில் முற்பாதியில் துன்பமும் செவ்வாய் நீச்சமடைந்திருந்தால் சந்திர தெசையைப் போல் முற்பகுதியில் கஷ்டமும் பிற்பகுதியில் வெகு தனலாபமும் விருச்சிக ராகு தெசையில் ஷ்டி பிரபல யோகமும் தெசை மத்தியில் வியாகூலமும் தெசை முடிவில் விசேஷ சுகமும் உண்டாகும்.

(393) புனர்பூசம் 1, 2, 3-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் மேஷ லக்கினமுமாகி 10-மாதி 2-ல் இருந்தாலும், 5-மாதி 6-மாதி

யுடன் கூடி 5-ல் இருந்தால் அம்மானல் பாக்கியமும் உண்டு. ராஜாங்க உத்தியோக ஜீவன்ம் உண்டு. 20-க்கு மேலும் 25, 30, 35, 40, 50 இந்த வயது காலங்களில் வெகு பிரசித்தியும் தனமுமடைந்து க்ஷேத்திர கிராமதிபதியாவான். குரு இதற்கே 11-ல் இருந்து இவர்களால் பார்க்கப்பட்டாலும் புத்திரப் பிரசித்தியும் புத்திரனல் சுகமுமடைவான்.

(394) கன்னியா லக்கினம் ஜன்ம லக்கினமும், கும்பத்தில் சந்திரனுமாகப் பிறந்து சுக்கிரன் 2-ல் இருந்தாலும் உச்ச புதனை நீச்ச மகர குரு பார்த்தாலும் ராஜமுத்திராதிகார மூலமும் மத்திய வயதில் சம்பத்தும் உண்டு. நீச்ச குரு சகட யோகமானாலும் மத்திய வயதில் 12 வருஷம் பிரபல யோகமும், 42 வயதுக்குப் பிறகு யோக பங்கமுமாகி 50-க்குப் பிறகு சுகமும் மறுபடி பிரபலமுமடைந்து ஜீவனம் செய்வான்.

(395) தனுசு லக்கினம் ஜன்ம லக்கினமும் துலா சந்திரனுமாகி மீன குரு சகட யோகமானாலும் 2-ல் சுக்கிரன் வர்க்கோத்தமத்தில் இருந்தால் 16 வயது முதல் பிரசித்தியும் வியாபாரமும் க்ஷேத்திர சுகமுமாகி ஜீவனம் செய்வான். ஷை சுக்கிரனுடன் சூரியனும் கூடியிருந்தால் பிதுரார்ஜிதம் விசேஷமாயுண்டாகும்.

(396) தனுசு லக்கினமும் சதயம் ஜன்ம நக்ஷத்திரமும் ஆகி லக்கினத்தில் சூரியனுடன் சுக்கிரனிருந்தால் ஜாதகன் உத்தியோக ஜீவனமுடையவன். இதற்கே புதனும் செவ்வாயும் 2-மிடத்திலிருந்தால் முப்பது வயது முதல் யோகமும் 36-ல் பங்கமும் 40-க்குப் பிறகு யோகமும் ஆயுள்வர சுகமும் உண்டாகும். இதற்கே துலா ராகு தெசையில் ஜன்ம காலத்தில் தகப்பனுக்குக் கஷ்டமும், கன்னியா குரு தெசையில் சகோதரப் பிரபலமும், தனக்கு விவாகமும், உத்தியோக ஜீவனமும் உண்டு. மீன சனி தெசையில் ஆரம்பத்தில் அற்ப சுகமும் மத்தியில் வெகு சுகமும், வியாபார பிரபுவினல் வாகனதி சகல சுகபோகங்களும் உண்டு. 1000-த்திற்கு மேல் சம்பாதித்தலும் உண்டு. மேற்படி புதனுடைய தெசையில் க்ஷேத்திர விருத்தியும் ஏற்படும்.

(397) மேஷ லக்கினமும் ஜன்ம நக்ஷத்திரம் சதயமும் ஆகிப் பிறந்து லக்கினத்தில் குரு இருந்தால் சொர்ண வியாபாரத்தினலும், பற்பல வியாபாரத்தினலும் 25 வயது முதல் பிரபல பிரசித்தியடைந்து ஜீவனம் செய்வான். இதற்கே மிதுனத்தில் சனியிருந்தால் ஷை சனி தெசையில் 15000 தனம் சம்பாத்தியமும் ஷை சந்திரனுடன் புதன் கூடில் அந்த புத தெசையில் பூமி வியாபாரம்

இவற்ருல் வெகு வியாபாரமாக செய்து இதிலும் 15000 தனமடைவான். விருச்சிகத்திலுள்ள கேது தெசையில் வெகு பாக்கியமும் புத்திரனுலும் பாக்கியமுமடைவான்.

(398) ஜன்ம லக்கினம் கும்பமும், ஜன்ம நக்ஷத்திரம் அஸ்வணியுமாகி 5-ல் குரு சுக்கிரரிருந்தால் உத்தியோகத்தில் சதுரனுகி ஜீவனம் செய்வான். 50 வயதிற்குப் பிறகு யோக பங்கமும் பிறகு சுகமும் உண்டாகும். இதற்கே சந்திரன் ராகு கேதுவுடன் கூடில் சந்திர தெசை பங்கமுண்டாக்கும். பிறகு செவ்வாய் தெசைவரின் பிரபல உத்தியோக பாக்கியமுண்டாகும். மேற்படி சந்திரனுக்கேழில் ராகு இருந்தால் அந்த தெசையில் பங்கமுண்டாகும், சேர்த்த திரவியமழியும். ஷை குருவைச் சனி பார்த்தால் குரு தெசையிலும் வழி வழியாய் யோகபங்கம் நேரிடும்.

(399) பூராடம் ஜன்ம நக்ஷத்திரமும் ஜெனனம் மேஷலக்கினமுமாகி குரு, சுக்கிர, சனி, சூரியர் கூடி 6-ல் இருந்தால் வியாபார ஜீவனம் உண்டு. இதற்கே கும்பத்தில் ராகு இருந்தால் அந்த தெசையில் விசேஷ பாக்கியமுண்டாகும்.

(400) மூலம் ஜன்ம நக்ஷத்திரமும், மிதுனம் ஜெனன லக்கினமுமாகி குரு 5-ல் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் சூரிய, சுக்கிர, புதனிவர்கள் 4-ல் இருந்தாலும், 30 வயதுக்கு மேல் கிராமாதிகாரமடைதல் அல்லது பட்டிண அதிகாரமடைவான். இதற்கே சனி லக்கினத்தில் இருந்தாலும் இதே ஜீவனம் உண்டு.

(401) உத்திரட்டாதி ஜன்ம நக்ஷத்திரமும் தனுசு ஜன்ம லக்கினமுமாகி 7-ல் குரு, புத, சூரிய, செவ்வாய் ஆகிய 4 கிரகங்களிருந்தால் எழுத்து வித்தையில் வல்லவனுகி 20 வயதிற்கு மேல் சொற்ப கிராமாதிகாரமும் பெருவான். 30 வயதுக்கு மேல் வெகு பாக்கியமும் உண்டு. புதனுடைய தெசையில் பிதாவுக்கு வெகு யோகமும் உண்டு. கும்ப கேது தெசையில் சில கிராமாதிகாரமும் கடக சுக்கிர தெசையில் வெகு கிராமாதிகாரமும் மாதம் 1000-த்துக்கு மேல் சம்பாத்தியமும் உண்டு. ஷை சூரிய தெசையில் பாக்கிய லாபமும் யோகமுமாக ஜீவனம் நடக்கும்.

(401) ரேவதி ஜன்ம நக்ஷத்திரமும் சிம்ம லக்கினமுமாகி 10-ல் கேதுவும் 10-மாதி 9-லுமிருந்தால் கடுந் தண்டனையிடுபவன், பிரபல உத்தியோக ஜீவனம் உண்டு.

(402) ஹஸ்தம் ஜன்ம நக்ஷத்திரமும் கும்பம் ஜன்ம லக்கினமுமானுல் 12-ல் சுக்கிரனிருந்தால் பிரபல வியாபாரமும் ராஜாங்

கத்தில் நல்ல வாச்சாலகப் பிரசங்கமும் செய்து ஜீவனம் உண்டு. இதற்கே சந்திரனுக்கேழில் குரு இருந்தால் குரு தெசையில், குரு தெசை பிரபல யோக தெசையாகும். இதற்கே மிதுனத்தில் சனி யிருந்தால் சனி தெசை பிரபலமாகும், ஆயினும் இத்தெசைகளில் அஷ்டமாதிபதி புக்தி தவிர்த்து மற்றவைகளில் எல்லாம் சுபமாகி $1\frac{1}{2}$ லக்ஷ ஆஸ்திமானுக ஆகி, ஜீவனமுடையவனுவன்.

(403) உத்திரட்டாதி ஜன்ம நக்ஷத்திரமும் விருச்சிக லக்கி னமுமாக ஜனித்து 11-ல் குரு, சுக்கிர, சூரியரிருந்தால் வியாபாரத் தினுல் ஜீவனம் உண்டு. இதற்கே 20, 25-ல் வியாபாரப் பிரபல மும் 33-ல் வியாபாரத்தில் தன ஹாணியும் உண்டு. 1-ல் கேது இருந்தால் அந்த தெசையில் தேசாந்தரம் செல்லலும் தனருண மும் ஏற்படும். 37-ல் சுகமும் 40-ல் சுகமும் பிறகு கிலேசமும் 42-ல் தாரஹாணியும் ஏற்படும்.

(404) ஜெனனம் சிம்ம லக்கினமும் அனுஷத்தில் விருச்சிக சந்திரனும் இருக்க ஜனித்து 9-மாதி 11-லும், 10-மாதி 5-லும் இருந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால் சுக்கிர தெசை யில் விசேஷ தன முண்டாகும். 4-ல் உள்ள சூரிய தெசையும் யோகமாகும். ஷை சூரியன் 2-மாதியுடன் கூடியிருந்தால் வீடு கட்டும் சமயம் விசேஷ புதையல் தன யோகமும் உண்டு. இவர் களுடன் கூடிய சந்திர தெசை வெகு யோகமுமாகும் சுகஜீவனமும் உண்டு.

(405) ஜன்ம லக்கினம் ரிஷபமும் கன்னியா சந்திரனுமாகி லக்கினுதியுடன் சனி கேது சேர்ந்து 2-ல் இருந்தால் விஷ்ணு ஆராதணை செய்யும் ஜீவனம் செய்வான்.

(406) ரேவதி ஜன்ம நக்ஷத்திரமும் ஜெனனம் ரிஷப லக்கின முமாகி 4-ல் சனி கேது இருந்தால் பிராம்மணர்களின் அன்ன சிரார்த்தத்தில் அன்னமுண்டு ஜீவனம் செய்வான். பாப ஜீவனம் உண்டு.

(407) ஜன்ம நக்ஷத்திரம் ரோகிணியாகி ஜெனனம் விருச்சிக லக்கினமுமாகி 1ல் குரு இருந்தால் குருத்துவமடைந்து பிரபல சிஷ் யர்களுடன் கூடி விஷ்ணு பூஜா துரந்தரனுக அரசாங்கப் பிரசித்தி யுடன் ஜீவனம் செய்வான்.

நிரயன மதம் முற்றிற்று.